# மாற்றுநிலையாக்கம், இடையிடுகை ஆகியன பற்றிய முறைவழிகளை வடிவமைத்தல்

தானியா பவென்ஹோல்ஸ்




1. அறிமுகம் 186

2. சிறந்த இடையீட்டு வடிவவமைப்பிற்கான நிபந்தனைகளும், கட்டமைப்புகளும் 187

தொலை நோக்குகள், இலட்சியங்கள் மற்றும் நிலையூன்றிய நலன் 187

மோதுகைகளையும் ஆற்றுகையாளர்களையும் பகுப்பாய்வு செய்தல் 189

உபாயங்களும் வகிபாகங்களும் 192

சரியான கூட்டுடமையாளர்களையும் பிரவேசத்தானங்களையும் கண்டறிதல். 194

உரிய நேரம் குறித்தல்: நீண்டகால பணிகளுக்கான தேவையும், சந்தர்ப்ப சாளரங்களும் 197

முறைவழிகள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குதல் என்ற ரீதியில் சிந்தித்தல் 199

சரியான ஆட்களைப் பணிக்கமர்த்துவதால் : தகைமை எதிர் அர்ப்பணிப்பும் கடப்பாடு 200

ஒத்துழைப்பும், கூட்டிணைப்பும்: சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான உபாயம்சார் முன்னணிகளை இனங்காணல் 201

முறைவழியை நிலைபேறாக்குதல் 203

கற்றல் வழிமுறையமைப்புகளை உருவாக்குதல் 204

3. சிறந்த வினாக்களும், எதிர்காலச் சவால்களும் 205

4. உசாத்துணையும், மேலதிக வாசிப்பும் 206

# மாற்றுநிலையாக்கம், இடையிடுகை ஆகியன பற்றிய முறைவழிகளை வடிவமைத்தல்

தானியா பவென்ஹோல்ஸ்

## 1. அறிமுகம்

தலையீட்டு முறைவழிகளை வடிவமைக்கும்போது பொதுவாக சந்திக்க வேண்டியுள்ள பிரச்சினைகளில், பல அடிப்படையில் ஒரு வினாவைச் சுற்றியே சுழல்வதை காணலாம். ஏதாவது ஒரு குறிப்பிட்ட மோதுகைச் சூழ்நிலையில் எந்தச் செயற்பாட்டாளர், எந்த உபாயங்கள், கருவிகளுடன், எந்த நேரத்தில் தலையீடு செய்யலாம் என்பதே அதுவாகும். தலையீட்டுக் கட்டுக்கோப்பொன்றைப் பிரதிபலிக்கும் ஒரு பக்க வரைவியல் கட்டமைப்பை பயன்படுத்தி கற்றறிவாளர்களும், செயற்பாட்டாளர்களும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயன்றுள்ளனர்.

யதார்த்தம் வேறுபட்டதாகும். சிக்கலான பிரதேசங்களில் காணப்படும் பிற தலையீடுகளைப் போலவே சமாதானத்துக்கான தலையீடும் பல செயற்பாட்டாளர்களின் ஒட்டுமொத்த கட்டமைப்பினால் திட்டமிடப்படாது தத்தம் இயல்பூக்கத்தினாலும், ஏற்புக்குரிய முறைவழியாலும் வழக்கமாக ஒரு செயற்பாட்டாளராலேயே திட்டமிடப்படுகிறது. எனவே எவ்வாறு தலையீடு செய்யலாம் என்பதற்கான சாத்தியக்கூறு குறிப்பிட்ட மோதுகைச் சூழ்நிலை தொடர்பில் தலையீடு செய்யும் செயற்பாட்டாளர்களின் விருப்புத்தேர்வுடனும் அவற்றுக்கான எல்லைகளுடனும் நேரடியாகத் தொடர்புற்றுள்ளது.



தலையீட்டு உபாயங்கள் போன்ற பிரச்சினைகள் உண்மையில் பிரவேசத்தானங்கள் அல்லது கூட்டிணைப்புக்கள் போன்ற வெவ்வேறு வழிகளில் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன. செயற்பாட்டாளர்கள் சரியான உத்திகள் எவை என்றோ அல்லது கருவிகள் எவை என்றோ கேட்பதுகூட அரிது. மாறாக, அவர்கள் தாம் சொந்தமாகத் தயாரித்துவைத்துள்ள இடையீட்டு வடிவமைப்பை வளர்த்தெடுத்துள்ளனர் . உதாரணமாக, கல்விமான்கள் பிரச்சினை தீர்க்கும் செயலமர்வுகள் அல்லது இணக்கப்பாட்டுப் பயிற்சி போன்ற கருவிகளை ஆலோசனையாக முன்வைக்கக்கூடும். அபிவிருத்தி முகவர் நிலையங்கள் மோதுகையின் அடிப்படைக் காரணங்களை ஆராயும் செய்திட்டங்களை ஆரம்பிக்கும் பத்திரிகையாளர்கள் ஊடாக நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளிப்பர். அரசாங்க முதலாவது தட செயற்பாட்டாளர்கள் நல்லெண்ணம், வசதிகள் அல்லது மத்தியஸ்தம் வழங்குவர். இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்களை வழங்கல் பக்கத்தில் கொண்ட, அத்துடன் ஒவ்வொருவரும் தமது சொந்த உற்பத்திப் பொருளை வழங்கும் ஒரு சந்தை நிலவரத்தைப்பற்றிப் பேசுவது மேலும் தவறற்றதாகவிருக்கும். இக்கருவிகளின் வழங்கல் சில வேளைகளில் மிகவும் செழுமையாக இருப்பதால் அவை தேவைக்கு மேலானதாக உள்ளது.

உட்பிரவேசத்துக்கான மையப்புள்ளிகள்( இடங்கள்)பற்றி விவாதிக்கப்படுவதில்லை அவை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. செயல்வழக்கில் பிரவேசத்தானங்களைவிட தரப்பட்ட நிகழ்வுண்மைகளுக்கே கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. மோதுகை செயற்பாட்டாளர்கள் பல்வேறு தொகுதிகளிலிருந்து வருவதுடன் இயல்பாகவே சிக்கலான பிரதேசங்களிலுள்ள தமது தொகுதிகளுக்கே ஆதரவு தேடுவர். சமாதான செயற்பாட்டாளர்கள் உள்ளூர் சமாதானக் குழுக்களுக்கு ஆதரவளிப்பர். தேவாலய அமைப்புக்கள் தமது உள்ளூர்த் தேவாலயங்களுக்கு ஆதரவளிப்பர். மத்திய கிழக்கில் நோர்வேயின் மத்தியஸ்தம் போன்ற நிகழ்ச்சிகளைப்போல் பிரவேசத்தானங்கள் தற்செயலாக எழவும் கூடும். அதில் நோர்வே ஆராய்ச்சி செயற்றிட்டத்தில் பங்கேற்போர் இருதரப்பு தலைமைத்துவங்களையும்

நேரடியாக அணுகக்கூடியவர்களாக இருந்ததுடன், ஆராய்ச்சியாளர்களில் ஒருவர் நோர்வே வெளிநாட்டு அமைச்சரின் மனைவியுமாகவிருந்து முதலாவது தட மட்டத்தில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார்.

கூட்டிணைப்பானது பொதுவில் ஓர் கொள்கை நிலைப்பட்ட விடயமாகவே உள்ளது. தலையீட்டு செயற்பாட்டாளர் ஒவ்வொருவருக்கும் கூட்டிணைப்பு தேவை. ஆனால், எவரும் கூட்டிணைக்கப்படுவதற்கு விரும்புவதில்லை. இது குறிப்பாக பிற செயற்பாட்டாளர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் கூருணர்வுள்ள அத்துடன் மோதுகை நிலைமாற்றம், சமாதான உருவாக்கல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த நோக்கங்களுடன் சிலசமயங்களில் ஒத்திசைவுகூடக் கொண்டிராத நிலையூன்றிய நலன்களைக் கொண்டுள்ள சமாதான இடையீட்டாளர்களுக்கு குறிப்பாக ஏற்புடையது.

எவ்வாறாயினும், ஐயப்பாடு ஒருபுறமிருக்க, கடந்த பத்தாண்டுகளில் கல்விப் புலமையாளர்களும் செயற்பாட்டாளர்களும் பல்வேறு சமாதான இடையீடுகளிலிருந்து பலவற்றைக் கற்றுக்கொண்டுள்ளனர். இவ்வத்தியாயத்தில் மோதுகை மாற்றுநிலையாக்கத் துறையில் பாடங்கள் சிலவற்றின் தொகுதி ஒன்றில் எழுத்தாளர் கவனம் செலுத்துகிறார். இடையீட்டு உத்திமுறைகள் செயற்பாட்டாளர்களிடையே வேறுபடுவதால் இக்கட்டுரையில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டுள்ள வரவெல்லைகளும், நிபந்தனைகளும் பிரதானமாக மோதுகைத் தீர்வுக்கான அரசசார்பற்ற அமைப்புக்கள் போன்ற அரசசார்பற்ற செயற்பாட்டாளர்கள் அல்லது செயல் நோக்கிய ஆராய்ச்சி நிறுவனங்கள் (அசாநிகள்) தொடர்பாளவையாகவே உள்ளன. எவ்வாறாயினும், பல கட்டமைப்புக்கள் இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்களுக்குப் பொதுவாக ஆர்வமூட்டுவதாகவே உள்ளன.

இவ்வத்தியாயமானது மோதுகைப் பிரதேசத்திலுள்ள செயற்பாட்டாளர்களுக்கு ஆதரவு வழங்குவதே வெளி இடையீட்டுச் செயற்பாட்டாளர்களின் பணியாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, குடிமக்கள் சமாதான இடையீடுகளின் வெளியகத்திட்டமிடலில் பயன்படுத்தப்படும் பல்வேறு அணுகுமுறைகளையும் கருவிகளையும் தருகிறது. கட்டுரையாளர் மூன்று வெவ்வேறு இடையீட்டு மட்டங்களில் பேரியல்பு(உயர் மட்டம்), இடைநிலை(இடைமட்டம்), நுண்ணியல்பு(அடிமட்டம்) மட்டங்களில் பத்து தீர்மானகரமான விடயங்களை ஆராய்கிறார்: தொலைநோக்கு, இலக்குகள், ஈடுபாட்டுக் கடப்பாடு ஆகியவற்றின் தேவை, முரண்பாடுகளையும் செயற்பாட்டாளர்களையும் ஆராயும் முறை, இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்களின் உத்திகளும் பாத்திரங்களும், சரியான பங்காளர்களையும் பிரவேசத் தானங்களையும் தொடர்ந்து தேடுதல், இடையீடுகளுக்கு நேரம் குறித்தல், முறைவழிகள் மற்றும் நிர்மாணக்கட்டமைப்புக்கள் என்ற ரீதியில் சிந்தித்தல், களப்பதவியினரின் ஆட்சேர்ப்பு அளவுகோல்கள், கூட்டிணைப்பும் ஒத்துழைப்பும், இடையீட்டு முறைவழிகளுள் நிலைதகவையும் கற்றலையும் இலக்குகளாக உள்ளடக்குதல்.

இக்கட்டுரையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இடையீட்டுக்கான நிபந்தனைகள் இதுகுறித்த இலக்கியங்களில் காணப்படும் நுண்ணறிவுகளிலிருந்தும், எழுத்தாளரது சொந்த செயல்ரீதியான கள அனுபவம் அத்துடன் சமாதான உருவாக்கல்: ஒரு கள வழிகாட்டு நெறி என்ற கைந்நூலிலிருந்து (பவன்ஹொல்ஸ் மற்றும் ரீசலர் 2000) பெற்ற பாடங்களிலிருந்தும், வாழ்க்கை மற்றும் சமாதான நிறுவகத்தின் (LPI) சோமாலியாவில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் ஈடுபாடு (பல்வென்ஹோல்ஸ் 2001) மீதான ஆய்விவிருந்தும் தொகுக்கப்பட்டனவாகும்.

## 2. சிறந்த இடையீட்டு வடிவமைப்புக்கான நிபந்தனைகளும், கட்டமைப்புகளும்

### 2.1 தொலை நோக்குகள், இலட்சியங்கள் மற்றும் நிலையூன்றிய நலன்

செயற்பாட்டாளர்கள் மோதுகை மாற்றுநிலையாக்க / இடையீட்டு உத்திகளை அபிவிருத்திசெய்வதற்கு எத்தனிக்கு முன், அவர்கள் சொல்லப்பட்ட அபிலாஷைகளுக்கும் இடையீடு செய்யவேண்டிய தேவைகளுக்கும் அடிப்படையாக இருக்கும் தொலைநோக்கினை அணுகிப்பார்க்கும்படி

மதியுரை வழங்குவது சிறந்தது. இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்களக்கு சமாதான விளைவு தொடர்பான ஒரு தெளிவான தொலைநோக்கு இல்லாதபோது அவர்களது இடையீடுகள் மோதுகைப் பிரதேசத்தின் கேள்வி அல்லது உண்மையான தேவைகளால் தீர்மானிக்கப்படாது, மாறாக வழங்குநர்களின் சந்தையால் தீர்மானிக்கப்படக்கூடிய ஆபத்து உண்டு. சமாதானத்துக்கும், மோதுகை மாற்றநிலையாக்கத்துக்குமான உண்மையான ஈடுபாட்டுக் கடப்பாடுடன் செயற்படும்போது இடையீடுகள் பாதிப்புகளைக் குறைத்து நிர்மாணத் தன்மையுடைய மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு இட்டுச்செல்லக்கூடிய பயனுறுதிமிக்க நடைமுறைகளுக்கு உதவக்கூடிய சந்தர்ப்பங்களை அதிகரிக்கும்.

எவ்வாறாயினும், தொலைநோக்கு மட்டுமே போதுமானதல்ல. இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்கள் தமது தொலை நோக்குகளை செயற்படுத்தக்கூடிய, எய்தக்கூடிய இலக்குகளாக மாற்றவேண்டும். அப்போதே அவை பயனுறுதிமிக்க இடையீட்டு உத்திகளை விருத்தி செய்வதற்கான அடிப்படையாக அமையும். சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மோதுகை மாற்றுநிலையாக்கத் தேவைகள் ஆகியவற்றில் பிரயோகிக்கப்படுவதுபோன்று இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்கள் / நிறுவனங்களின் இயலுமைகள் மற்றும் மட்டுப்பாடுகள், பெறுமதி, ஆர்வம் ஆகியவற்றை ஆராய்வதன்மூலம் இலக்குகளை நன்கு தெளிவாக்கலாம். இலக்குகள் தெளிவாக இருக்கவேண்டிய அதே வேளை, இவ்விலக்குகளை எய்துவதற்குப் பிரயோகிக்கப்படும் உத்திகள் வேறுபடலாம். அத்துடன், அநேகமாக மோதுகை மாற்றுநிலைச்செயலாக்கத்தின்போது இயைபாக்கம் அல்லது மாற்றம் செய்யப்படலாம்.

சோமாலி சமாதான முறைவழியில் வெவ்வேறு செயற்பாட்டாளர்களின் வகிபாகங்கள் சமாதானத்தையும் மோதுகை மாற்றுநிலையாக்கத்தையும் உருவாக்கும்பொருட்டு எடுக்கப்படும் எந்த முயற்சியிலும் தெளிவான ஒரு தொலைநோக்கினதும், ஈடுபாட்டுக் கடப்பாட்டினதும் பெறுமதியை எடுத்துக்காட்டுகின்றன. ஐக்கிய நாடுகளும் (UN) பின்னர் பிற இரு தரப்பு அரசாங்க செயற்பாட்டாளர்களும் (சுவடு 1) யுத்தமிடுவோரிடையே பல்வேறு சமாதான ஒப்பந்தங்களில் இணக்கப்பாட்டைக் கொண்டுவர முயன்று தோல்விகண்டபோதும் சமாந்தர பணிகளை மேற்கொள்ளும் சுவிடன் நாட்டு திருச்சபை அடிப்படையிலான அரசசார்பற்ற அமைப்புக்கள், LPI ஆகியவை சோமாலியாவில் சமாதானத்தை உருவாக்குவதில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. கடந்த எட்டு ஆண்டு காலப்பகுதியில் LPI வெவ்வேறு சோமாலி சிவில் சமூக குழுக்களுக்கும், அடிமட்ட சமுதாயங்களுக்கும் பயனுறுதியுள்ளவகையில் அதிகாரமளித்துள்ளது. (பவ்வென்ஹோல்ஸ் 2001).

சோமாலியாவில் LPI யின் ஈடுபாட்டின் வலுவானது பயன்படுத்தப்பட்ட எல்லா உத்திகளின் பின்னாலிருந்த உந்து விசையான தொலைநோக்கில் தங்கியிருந்தது. LPI பதவியினர் அனைவரதும் தெளிவான ஈடுபாட்டுக் கடப்பாடும், கீழிருந்து மேல்நோக்கிய சமுதாய அடிப்படையிலான சமாதான உருவாக்கல் அணுகுமுறை ஆகியவற்றில் கொண்டிருந்த வலுவான நம்பிக்கையும் முறைவழியில் எதிர் கொள்ளப்பட்ட அனைத்து சிக்கல்களையும் சமாளிக்க உதவின. உதாரணமாக தென் சோமாலியாவில் மிகவும் வெற்றிகரமாக அமைந்து மாவட்ட மன்றங்களை நிறுவுவதற்கு LPI ஆரம்பத்தில் ஆரதவளித்தது. எவ்வாறாயினும் ஐடீட்டின் யுத்தத் தரப்பினர் இப்பிரதேசத்தில் இராணுவரீதியாக இடையீடு செய்தவுடன் இது வீழ்ச்சியடைந்தது. ஐ.நா. இப் பிராந்தியத்திலிருந்து பின் வாங்கியபோதும், LPI தொடர்ந்தும் அதன் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. மேலும் LPI வடமேல் சோமாலியாவில் சோமாலிலாந்து உள்ளூர் இணக்கப்பாட்டுக்கு ஆதரவளித்தது. 1994இல் யுத்தம் மூண்டபோதும்கூட இணக்கப்பாட்டை எய்துவதற்கு சோமாலிலாந்து சமூகம் கொண்டிருந்த இயலுமைமீது LPI தொடர்ந்து நம்பிக்கை வைத்திருந்ததுடன் சமாதான முறைவழி தொடரப்பட்டபோது அனைத்து வெளியக செயற்பாட்டாளர்களும் ஒதுங்கியவேளையில் அதற்கு ஆதரவளிக்க முதலில் முன்வந்தவர்களில் ஒருவராகவும் இருந்தது.

**பெட்டி 1 : LPI இன் தொலை நோக்கு**

சமாதானத்தை உருவாக்குதலில் LPI இன் அணுகுமுறையின் அடிப்படைத் தத்துவத்தின் சிறப்பியல்புகள் வருமாறு:

- நிலைதகவுள்ள சமாதானத்தை உருவாக்குதல் என்பது மோதுகைகளுள்ள சமூகத்திலிருந்து மட்டுமே எய்தக்கூடியதொரு நீண்டகால முறைவழியாகும்.
- நீடித்திருக்கக்கூடிய சமாதானத்தை உருவாக்குதல் என்பது மேட்டுக் குடியினரை மாத்திரமன்றி, முழு சமூகத்தையும் ஈடுபடுத்தும் ஒரு முறைவழியாகும்.
- நிலையான சமாதானத்தை உருவாக்குதல் என்பது மோதுகை மாற்றுநிலையாக்க நடைமுறைக்கும், வன்முறைக் கலாசாரம் ஒன்றை சமாதான கலாசாரமாக மாற்றுநிலையாக்குவதற்கும் இட்டுச்செல்லும்.
- நீடித்திருக்கக்கூடிய சமாதானமானது உள்ளூர் ஜனசமூக மட்டத்தில் ஆரம்பிக்கப்படவேண்டும்.

  நீடித்திருக்கக்கூடிய சமாதானத்தை உருவாக்குவதில் அர்த்தமுள்ள ஒரு பங்களிப்பினை அளிக்கும் நோக்கில் LPI ஆனது இருவழி அணுகுமுறை ஒன்றை அபிவிருத்திசெய்து அதற்கு கீழிருந்து மேலான சமாதான உருவாக்கல் அல்லது ஜனசமூக அடிப்படையிலான சமாதான உருவாக்கல் எனப் பெயரிட்டது. இவ்வணுகுமுறையில்,
- சமாதான முறைவழியில் அவர்களது பிரதேசத்தில் சமாதானத்தை உருவாக்குதலில் அர்த்தமுள்ள பங்களிப்பை அளிக்கக்கூடியவகையில் சிவில் செயற்பாட்டாளர்களின் பங்கை வலுப்படுத்திற்று.
- சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் மக்கள் அடிப்படையிலான, நீடித்திருக்கக் கூடிய சமாதானத்தை உருவாக்கல் தத்துவத்தைப் படியவைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்ட ஒரு வெளியக இலகுபடுத்துநராக LPI தனது பங்கை வரையறுக்கின்றது.

## 2.2 மோதுகைகளையும் ஆற்றுகையாளர்களையும் பகுப்பாய்வு செய்தல்

அனைத்து சமூகப் புலப்பதிவுகள் போன்று மோதுகைகளும் மிகவும் சிக்கலானவையாகும். தனிநபர்களுக்கிடையிலான எந்த ஒரு மோதுகையிலும் இயல்பாகக் காணப்படும் ஏற்கனவே சிக்கலான வரைவெல்லைகளுக்கு மேலாக, ஆயுதமேந்திய மோதுகைகளை தனித்தன்மையுடையவையாக்கும் பல செயற்பாட்டாளர்களையும், பிரச்சினைகளையும் புரிந்துகொள்வது மிகவும் கடினமாகும் (வேர் 1979). எனவே, இடையீடு செய்யும் செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்ட மோதுகைப் பின்னணியைப் புரிந்துகொள்ளும்வகையில் பணியாற்றுவது மிகவும் தீர்மானகரமானதாகும்.

மோதுகைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு பல்வேறு அணுகுமுறைகள் உள்ளன. இவ்வுத்திகளையும் கருவிகளையும் கல்விசார், பிரயோக தொகைசார், பண்புசார் பங்கேற்பு, பங்கேற்பில்லாத முறையியல்கள் என பகுப்பாய்வு மட்டங்கள் மூன்றிலும் காணக்கூடிய முறையியல்களாக வேறுபடுத்தலாம்.(பேரியல்பு, இடைநிலை, நுண்ணியல்பு).

(1) **பேரியல்பு மட்டம்** : மோதுகைகள் அத்துடன் செயற்பாட்டாளர்களின் பகுப்பாய்வுக்கான கல்விசார் அணுகுமுறைகளினால் இம்மட்டம் கூடுதலாக ஆதிக்கம் செலுத்துகிறது. இங்கு நேரகால

எச்சரிக்கை முறைமையினுள் அபிவிருத்திசெய்யப்படும் நெருக்கடிச் சுட்டிகளின் வரைவிலக்கணம் சம்பந்தமாக உதவி வழங்கும் நாடுகளின் பொதுவான அணுகுமுறை கையேற்கப்படுகிறது. இந்த நெருக்கடிச் சுட்டிகள், உதவி வழங்கும் முகவர் நிலையங்கள் குறிப்பிட்ட மோதுகை நிலைமைக்கு ஏற்ப தமது கருவிகளையும், தகவல் தேவைகளையும் மேலும் சிறந்தமுறையில் இசைவாக்கம் செய்யக்கூடிய வகையில் நாடுகளை உயர்நிலை, தாழ்நிலை, இடரற்றவை என வகைப்படுத்துகின்றன. (ஸ்பெல்ற்றன் 1999 ஐப் பார்க்க).

அண்மைக்காலத்தில் உதவும் சமூகத்தினுள் அபிவிருத்திசெய்யப்பட்ட பகுப்பாய்வு அணுகுமுறைகள், பங்கேற்பு துரித மதிப்பீடுகள்போன்ற தாபிக்கப்பட்ட அபிவிருத்தி கூட்டுறவு கருவிகளை பண்டைய மோதுகைப் பகுப்பாய்வுடன் இணைக்கின்றன (மேஹ்லர் மற்றும் ரிபோ 1999). மோதுகைகளுக்கான பொதுவான காரணங்களை இடையீட்டு செயற்பாடுகளுடன் இணைக்கும் அணுகுமுறை ஒன்றின் சிறப்பான உதாரணம் ஐரோப்பிய ஒன்றிய (EU) வழிகாட்டியான *சமாதான உருவாக்கலும், மோதுகைத் தடுப்பும்,* ஒரு பிரயோக வழிகாட்டி (லண்ட், மேஹ்ல 1999) ஆகும்.

மோதுகைப் பகுபாய்வுக்கான மிகவும் கூடுதலான கல்விசார் அணுகுமுறையானது போல் வேஹ்ர் அவர்களால் (1979) முதலில் வளர்த்தெடுக்கப்பட்ட மோதுகை விளக்க வரைபடத் திட்டமிடல் வழிகாட்டியாகும். இவ் வழிகாட்டியானது எந்த ஒரு பயனுறுதிமிக்க மோதுகைப் பகுப்பாய்விலும் முறையாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஐந்து அம்சங்களை வலியுறுத்துகின்றது: மோதுகை வரலாறு, மோதுகைச் சூழமைவு, மோதுகைத் தரப்பினர், மோதுகை விடயங்கள், மோதுகை இயக்கவியல். மோதுகை வரைபடத்திட்டமிடலின் ஒரு சுருக்கப் பதிப்புரு செயற்பாட்டாளர்களினதும், அவர்கள் மற்றவர்களுடன் கொண்டுள்ள தொடர்புகள்பற்றியும் ஒரு மிதமான தரம்சார் பகுப்பாய்வைத் தருகின்றது.



அத்தகைய ஒரு கற்பனாரீதியான பண்புசார் பகுப்பாய்வில் விளக்க வரைபடம் தீட்டுவோர் மோதுகைச் சூழமைவு, தரப்பினர், காரணங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கின்றனர். அத்தகைய ஒரு விளக்க வரைபடத்தை தீட்டுவதற்கான முயற்சியை மோதுகைகளின் வெவ்வேறு மட்டங்கள் அனைத்திலும் ஒட்டுமொத்தமான நிலைமையின் பொதுவான மீளாய்விலிருந்து மோதும் தரப்பினரின் பெறுமானங்கள், ஆர்வங்கள் அல்லது தேவைகள் பற்றிய ஆழமான ஆய்வுவரை கல்விசார் நோக்கிலும், பங்கேற்பு நோக்கிலும் நடாத்தமுடியும். (வேஹ்ர் 1978 ஐப் பார்க்கவும்). குழு மோதுகைகளின் சிக்கலான இயல்பை எளிதாக்குவதற்கும் புரிந்து கொள்வதற்கும் விழையும் செயற்பாட்டாளர்களுக்கு இந்த நுட்பம் குறிப்பாக உதவக்கூடியதாக இருக்கும்.

ஜோன் போல் லெடராச் என்பவர் ஆயுதமேந்திய மோதுகையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் புரிந்துணர்வு மீது கூடிய கவனத்துடன் இதை ஒத்த அணுகுமுறை ஒன்றை வளர்த்தெடுத்துள்ளார். அவர் மோதுகைப் பிரதேசங்களில் காணப்படும் தலைமைத்துவ மட்டங்களை உயர் மட்ட, நடுமட்ட மற்றும் அடிமட்ட தலைவர்களாக வேறுபடுத்தும் ஒரு செயற்பாட்டாளர் பகுப்பாய்வை வழங்குகிறார்.

அவர் ஒரே வார்ப்புரு இருக்கக்கூடிய அல்லது இருக்கும் சமாதான செயற்பாட்டாளர்களை பகுப்பாய்வு செய்வதற்கான யோசனையை கூறுவதுடன், பின்னர் ஒத்திசைவான இடையீட்டு உத்திகளையும் சமர்ப்பிக்கின்றார். (லெராச்டா 1997) இந்த வயையான விளக்க வரைபடத்திட்டம் உள்ளக சமாதான செயற்பாட்டாளர்களுக்கு அவர்களது கருத்தை வெளிப்படுத்துவதன் காரணமாக, வெளி இடையீட்டுச் செயற்பாட்டாளர்களுக்கு குறிப்பாக பயனுள்ளதாயுள்ளது.

மோதுகைப் பகுப்பாய்வின் விரிவான அணுகுமுறைகளில் அநேகமானவை நேரகால எச்சரிக்கைத் துறையில் காணப்படுகின்றன. மோதுகைப் பகுப்பாய்வுக்கான தரம்சார் மற்றும் அளவுசார் அணுகுமுறைக்கிடையில் கல்விமான்கள் வேறுபாடுகளைக் காண்கின்றனர். பண்டைய முறைமைகளில்

தரம்சார் பகுப்பாய்வு மோதுகையின் அடிப்படையையும், நெருங்கிய காரணங்களையும் கவனிக்கின்றது. இது நேர்மறை, எதிர்மறை இடையீட்டுக் காரணிகளையும் பகுப்பாய்வு செய்கின்றது. இப்பகுப்பாய்வில் பிரதான விடயம் தகவல் சேகரிப்பு ஆகும். தகவல்களை சர்வதேச உள்ளூர் நிபுணர்களிடமிருந்து, ஊடகம், இணையம் மூலமாக செய்தி முகவராண்மைகளிடமிருந்து அல்லது தரம்சார் பகுப்பாய்வுக்கு அடிப்படையான விஞ்ஞான பிரசுரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பங்கேற்பு பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படலாம். ஆராய்ச்சியாளர்கள் தமது பகுப்பாய்வுகளை, மோதுகை பிரதேசத்துக்கு உள்ளேயும், வெளியேயுமுள்ள நிபுணர்களைக் கொண்ட கூட்டத்தில் சமர்ப்பிப்பார்கள் அல்லது ஆரம்பத் தானமாக மோதுகைக்கான காரணங்களை இணைத்து இனங்காணுவர். பங்கேற்பு பகுப்பாய்வில் பங்கேற்பவர்களின் தெரிவு மிகவும் தீர்மானகரமானதாகும். இந்த முறையியலைப் பகுப்பாய்வின் சகல மட்டங்களிலும் பயன்படுத்தலாம்.

சம்பவத்தரவுப் பகுப்பாய்வுபோன்ற மோதுகைப் பகுப்பாய்வுக்கான அளவுசார் அணுகுமுறைகள் மாறாக உலகளாவிய செய்தி அறிக்கைகளின் குறியீட்டுமுறையுடன் வன்முறையல்லாத, அத்துடன் வன்முறைப் போராட்டம் ஆகிய இரண்டுக்கும் நேரகால எச்சரிக்கைக்கான பொதுத் தகவல் வழங்குவதற்கு பயன்படக்கூடிய கூருணர்வுள்ள தரவு வில்லைகளையும் பயன்படுத்திச் செயற்படுகின்றன. இக் குறியீட்டு முறை மனிதரால் அல்லது தானியங்கி முறையில் விசேடமாக அபிவிருத்திசெய்யப்பட்ட மென்பொருளைக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது. இதனை வேர்ச்சுவல் ரிசேச் அசோசியேற்ஸ் (VRA) என்ற அமெரிக்க நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டு பல்வேறு நேரகால எச்சரிக்கைப் பொறிமுறைகளில் பயன்படுத்தப்படும் தானியங்கி நிகழ்வுத் தரவு அபிவிருத்திக் கருவிகள் மூலம் எடுத்துக்காட்டலாம்.

உதாரணமாக சுவிஸ் சமாதான மன்றத்தின் Fruhanalyse von spannungen und Tats chenermitting (FAST) நேரகால எச்சரிக்கைச் செய்திட்டம் மோதுகைப் பகுப்பாய்வில் தரம்சார், மற்றும் அளவுசார் அணுகுமுறையையும், அத்துடன் பங்கேற்பு அணுகுமுறையையும் இணைக்கின்றது (குருமெனாஷ் மற்றம் ஷிமேடிஸ் 1999 ஐப் பார்க்க). FAST செய்திட்டம் பாரம்பரிய தரம்சார் பகுப்பாய்வு முறையைப் பின்பற்றுகின்றதெனினும் மேலும் ஒவ்வொரு நாட்டுக்கெனவும் விசேடமாக அபிவிருத்தி செய்யப்பட்ட பகுப்பாய்வுக் கட்டுக்கோப்பைப் பயன்படுத்தி நேரகால செயற்பாட்டு இடையீட்டுக் காரணிகளை மேலும் கண்காணித்துப் பகுப்பாய்வு செய்கின்றது. இம் முழு முறைமையும் சம்பவத் தரவுப் பகுப்பாய்வு ஒன்றைத் தயாரிக்கும் வகையில் கைகளினாலும் மற்றும் தானியங்கி குறியீட்டு முறைமையாலும், மேலும் தரம்சார், அளவுசார் பகுப்பாய்வுகள் இரண்டினதும் விளைவுகளைச் செவ்வை பார்ப்பதற்கெனக் கலந்தாலோசிக்கப்பட்ட உள்ளூர், சர்வதேச நிபுணத்துவ வலையமைப்புகளின் கருத்துக்களாலும் செழிப்பாக்கப்படுகின்றது.

(II) **இடைநிலை மட்டம்**: மேலே எடுத்துக்காட்டப்பட்ட அணுகுமுறைகள் அனைத்தும் இடைநிலை மட்டத்திலும் பிரயோகிக்கப்படலாம். விசேடமாக VRA போன்றவற்றில் பயன்படுத்தப்படும் தரம்சார் அத்துடன் அல்லது பங்கேற்பு மோதுகை விளக்க வரைபடத் திட்டம் மற்றும் அளவுசார் முறைகள் ஆகியன இங்கு மிகவும் பொருத்தமானவையாகும். எவ்வாறாயினும், ஏசுயு நுட்பங்கள் இற்றைவரை பிராந்திய அல்லது உள்ளூர் மட்டத்தில் பயன்படுத்தப்படவில்லை. ஒரு பிரதிவிளைவாக குறித்துரைத்த நாடுகளில் இவ்விரு மட்டங்களிலும் இம்முறைகளை FAST செய்திட்டத்தினுள் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இடையீடுகளின் இந்த மட்டத்தில் மோதுகைப் பகுப்பாய்வுக்கான குறித்துரைப்பான பல அணுகுமுறைகள் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளன. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்க இரண்டு யுத்தத்தினால் பாதிப்புற்ற சமூகங்களின் செய்திட்டம் (WSP) சம்பந்தமான செயல் திசைமார்க்கம் கொண்ட ஆய்வு முறையியல் அத்துடன் Aktion Afrika Hilfe e.v. (AA.H) Na.O வினால் விரிவாக்கப்பட்ட ஜனசமூக அபிவிருத்தி அணுகுமுறையாகும் (எரஸ்மஸ் 2000ஐப் பார்க்க).WSP அணுகுமுறையின் கீழ் ஆராய்ச்சி

மற்றும் பங்கேற்பு செயலமர்வுகள் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அதன் மூலம் கல்விசார், பிரயோக முறையியல்களை இணைக்கின்றன. AAH ஆனது கூடுதலாக முறைவழிசார் அணுகுமுறை ஒன்றை பிரதிநிதிப்படுத்துவதுடன் மோதுகைகளின் பகுப்பாய்வில் கூட்டு (வெளியக செயற்பாட்டாளர்களை உள்ளூர் பங்காளர்களுடன்) பங்கேற்பு ஒன்றை உருவாக்கும் முகமாக சமூக விஞ்ஞானிகளால் அபிவிருத்திசெய்யப்பட்ட முறைவழி நோக்கிய முறையியல்களுடன் அபிவிருத்தி கூட்டிணைப்பிலிருந்து பெறப்பட்ட பங்கேற்பு அணுகுமுறையை இணைக்கின்றது.

(III) **நுண்ணியல்பு மட்டம்** மோதுகைகளும் செயற்பாட்டாளர் விளக்க வரைபடம் திட்டமிடலும்கூட இடையீடுகளின் உள்ளூர் செய்திட்ட மட்டத்தில் குறிப்பாக பங்கேற்பு முறையில் செயற்படுத்தப்படும்போது மிகவும் பயனுள்ளவைகளாகும்.AAH அணுகுமுறையினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட பல பகுப்பாய்வு கருவிகளும் செய்திட்ட இடையீடு குறித்து இந்த உள்ளூர் மட்டத்தில் பயனுறுதியுள்ளதாக அமையும். மேலும் அவை முறைவழி நோக்கியதாகவும், பங்கேற்பு வகையானவையாகவும் இருக்கும்வரை குறிப்பான எந்த அணுகுமுறை அல்லது முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளதென்பதை தெரிந்துகொள்வது அவ்வளவு முக்கியமானதல்ல. சிலசமயங்களில் மோதுகைகளினதும், செயற்பாட்டாளர்களினதும் பகுப்பாய்வில் வெவ்வேறு துறைகளில் அபிவிருத்திசெய்யப்பட்ட முறையியல்களின் இணைவுகளும் பயனுறுதிமிக்க கருவிகளாக விளங்கலாம்.

இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்குவது பல வேறுபட்ட முறைவழி நோக்கிய, அத்துடன் பங்கேற்பு அணுகுமுறைகளை இணைக்கும் செய்திட்ட வட்ட முகாமைத்துவம் (PCM) ஆகும். PCM ஆனது முதன் முதலாக நிகழ்ச்சித்திட்ட மட்டத்திலும், செய்திட்ட மட்டத்திலும் உதவி இடையீடுகளைத் திட்டமிடும் பொருட்டு தகவல்களை சேகரிப்பதற்கு ஒரு வழிகாட்டியாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஜேர்மன் Zielgruppen-orientierte Projekt planung (ZOPP) அடிப்படையிலான மாற்றியமைக்கப்பட்ட, விரிவாக்கப்பட்ட, தர்க்க ரீதியான கட்டுக்கோப்பாகும் (தகவல், பயிற்சி, அபிவிருத்தி லிமிட்டெட் 1999ஐப் பார்க்க). PCM, ZOPP ஆகிய இரண்டும் (ஒவ்வொன்றுக்கும் ஒன்றான) கடதாசி அட்டைகளைப் பயன்படுத்தும் பங்கேற்புமுறையான பிரச்சினை பகுப்பாய்வில் ஆரம்பித்து பிரச்சினைகளைத் திரட்டுவதனால் பின்தொடரப்படும். இரண்டாவது படியாக பிரச்சினைகள் பின்னர் குறிக்கோள்களாக மாற்றப்பட்டு செய்திட்ட இடையீட்டு உத்திகளாக அபிவிருத்தி செய்யப்படுவதற்குமுன் மேலும் திரட்டப்படுகின்றன. மோதுகை பகுப்பாய்வில் பயன்படுத்தக்கூடிய பயனுறுதி மிக்க நுட்பமான கருவிகளாக PCM ஐயும் ZOPP ஐயும் பயன்படுத்தமுடியும். செயற்பாட்டாளர் பகுப்பாய்வு ஒரு முறையாக நடைமுறைப்படுத்தப்பட்ட PCM அப்பியாசத்தின் ஒரு பகுதியாக, பெரிதாக்கப்பட்ட பங்கீட்டாளர் பகுப்பாய்வுடன் நன்கு செய்யப்படலாம். நடைமுறையில் செயற்படுத்தக்கூடிய அபிவிருத்திசெய்யப்பட்ட கருவிகள் இல்லாமையே ஒன்றிணைக்கப்பட்ட PCM/ ZOPP மோதுகை பகுப்பாய்வின் பிரதான குறைபாடாகும்.

ஆயினும் உதவி முகவர் நிலையங்கள் இத்தேவையைப் பூர்த்திசெய்யும்வகையில் ஓர் ஆய்வுச்செயல்முறையை ஆரம்பித்து வருகின்றன.

## 2.3 உபாயங்களும், வகிபாகங்களும்

தொலைநோக்கு தன்னளவில் வெற்றிக்கு உத்தரவாதம் அளிக்காது. இடையீடுசெய்யும் செயற்பாட்டாளர்கள் தமது தொலைநோக்குகளை பயனுறுதிமிக்க இடையீட்டு உத்திகளாக மாற்றுவதில் வெற்றிகாணவேண்டும். அவர்களது இலக்குகள் தெளிவாக இருக்கவேண்டிய அதேவேளை இவ்விலக்குகளை அடைவதற்கு என வளர்த்தெடுக்கப்படவேண்டிய உபாயங்கள் வேறுபடக்கூடும். அத்துடன் அவை மோதுகை மாற்றுநிலையாக்கத்தின்போது மாற்றியமைக்கப்படலாம், அல்லது இசைவாக்கம் செய்யப்படலாம்.

ஓர் இடையீட்டின் ஆரம்பத்திலிருந்தே செயற்பாட்டாளர்கள் இம்முறைவழியில் தங்களது பங்கை தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். வெளிவாரி செயற்பாட்டாளர்கள் வெளியார் என்ற முறையில் தங்களது பாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதென்றும், உள்ளக செயற்பாட்டாளர்களுக்கு அவர்கள் ஆதரவளிக்கும் அளவிலேயே அவர்களது பயனுறுதி தங்கியுள்ளது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும்.

உள்ளக செயற்பாட்டாளர்களை வலுப்படுத்தும் உத்திகள் வளர்த்தெடுக்கப்படவேண்டும். நிலைமைக்கு ஏற்ப எளிதில் இசைந்துகொடுக்கக்கூடிய உத்திகள் பல இணைக்கப்பட வேண்டியுள்ள தேவையை அனுபவம் ஒன்று காட்டுகிறது. செயற்பாட்டாளர்கள் வசதியளித்தலா அல்லது இணக்கப்பாடா, பயிற்சி அளித்தலா அல்லது இயலுமை அபிவிருத்தியா, பிரச்சினைகளைத் தீர்க்கும் செயலமர்வுகளை ஒழுங்குசெய்வதா அல்லது உள்ளூர் சமாதான முயற்சிகளுக்கு நிதி அளிப்பதா இவற்றுள் எது சிறந்தது என அவர்கள் தீர்மானிக்கவேண்டும்.......................................

இயலுமையில் மட்டுமல்லாது குறிப்பிட்ட சமாதான முறைவழியின் தேவைகளிலும் அத்துடன் சம்பந்தப்பட்டுள்ள உள்ளூர் செயற்பாட்டாளர்களிலும் தங்கியுள்ளது. LPI உதாரணமாக சோமாலியாவில் அடிமட்டப் பயிற்சி, உள்ளூர் நிருவாக கட்டமைப்புகளின் ஆற்றலை கட்டியெழுப்புதல் அத்துடன் உள்ளூர் இணக்கப்பாட்டு மாநாடுகளுக்கு பரிந்துரைத்தல், ஆதரவு வழங்குதல் போன்ற உத்திகளில் பலவற்றை செயற்படுத்திய அதே வேளையில், மொசாம்பிக் சமாதான செயல்முறையில் இத்தாலிய அரச சபர்பற்ற அமைப்பு (NGO) கம்யூனிற்றி சான் எகிடியோவின் ஈடுபாடு இதற்குமாறாக பிரதான மோதுகைத் தரப்பினரிடையே இணக்கப்பாடு மற்றும் இலகுபடுத்தல்மீது கூடிய கவனம் செலுத்தியது. (பவென்ஹோல்ஸ் 2000ஐப் பார்க்கவும்).

மேலும், மோதுகையான உத்திகளை தவிர்க்கவேண்டிய தேவை வெளிவாரி நிறுவனங்களுக்குள்ளது. உதாரணமாக நீண்டகால ஜனநாயக மயப்படுத்தல் அடிக்கடி குறுகியகால சிக்கல் தடுப்பு நடவடிக்கைகளுடன் இணங்காதிருக்கலாம். உள்ளூர் மனித உரிமை நிலையத்தின் ஆதரவுக்கு நிகராக சமாதான வானொலி போன்ற ஒன்றை நேரடியாக சமாதானச் செய்திட்டத்துக்கு ஆதரவாக அமைக்கலாம்.

புதிய உத்திகளில் ஈடுபடுவதற்கு முன் செயற்பாட்டாளர்கள் தமது அமைப்புக்களின் எல்லைகளையும் தெளிவுபடுத்த வேண்டும். சோமாலியாவில் பயன்படுத்தப்பட்ட LPI இன் உத்திகளின் நுணுக்கமான பகுப்பாய்வு LPI தனது சொந்த இயலுமை பற்றிய போதிய சிந்தனையால் வழிகாட்டப்படாது சில வேளைகளில் வெளிவாரி வளர்சிகளால் மிக அதிகமாக தள்ளப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. ஏனைய சந்தர்ப்பங்களில் LPI ஆனது பயிற்சி போன்ற குறிப்பிட்ட உத்திகளை செயற்படுத்துவதில் கூடுதலாக கவனம் செலுத்தி அதன் காரணமாக ஏனைய முக்கியமான பணிகளைத் தொடருவதை புறக்கணித்தது. இதன் விளைவாக ஒரு அமைப்புக்குத் தேவைப்படுவதும், மிகவும் பொருத்தமான அணுகுமுறையை செயற்படுத்து முகமாக கையாளக்கூடியதுமான உத்திகள் பலவற்றின் தொகுதியைப் பற்றிய வழிப்புணர்வு எப்போதும் தீர்மானகரமானதா இருக்கும்.

இதில் பல அத்தியாவசியமான கூறுகள் உண்டு. தெளிவான தரிசன நோக்கு, பொருத்தமான உத்திகளை வளர்தெடுத்துக் கொள்ளல், இம் முறைவழியில் ஒரு நிறுவனத்துக்குள்ள வகிபாகம் பற்றிய தெளிவான இணைவுள்ள ஒரு வரைவிலக்கணத்தை உருவாக்கிக்கொள்ளல் ஆகியன முக்கிய இடம்பெறும்.

## 2.4 சரியான கூட்டுடமையாளர்களையும், பிரவேசத்தானங்களையும் கண்டறிதல்

சரியான பங்காளர்களையும், பிரவேசத்தானங்களையும் கண்டறிதலென்பது ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக பின்னிப்பிணைந்த இரு பிரச்சினைகளாகும். அநேகமான சந்தா்ப்பங்களில் பங்காளர்கள் பிரவேசத் தானங்களையும் உத்திகளையும் கூட தீா்மானிக்கிறார்கள். சில பங்காளர்கள் இயற்கையால் வழங்கப்பட்டவா்கள். சிலா் தெரிவு செய்யப்படுகிறாா்கள். சிலா் இரண்டும் இணைந்தவராவா். அரசாங்க தடம் 1ன் நடத்துநா்களும் பாரிய கொடையாளிகளும் மோதுகைச் சூழலில் பரந்த அளவில் வேறுபட்ட செயற்பாட்டாளர்களை எளிதில் அணுகக் கூடியவா்களாக உள்ள அதேவேளை அரசசாா்பற்ற தடம் 11ல் பேசப்பெறும் செயற்பாட்டாளா்கள் அநேகமாக குறிப்பிட்ட தமது தொகுதியை அல்லது தம்மை அழைத்தவா்களை மட்டுமே அணுகக்கூடியவா்களாக உள்ளனா்(பவென்ஹொல்ஸ் 2002ஐப் பாா்க்க). பிரத்தியட்சமாகவே பேரியல்பு மட்டத்தில் பணியாற்றும் மூன்றாம் தரப்பினா், மோதுகையின் பிரதான தரப்பின் பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பணியாற்ற வேண்டியிருக்கும் அதே வேளையில், இடைநிலை மற்றும் நுண்ணியல்பு மட்டத்தில் பணியாற்றுவோா் தெரிவுசெய்வதற்கு மிகப் பரந்த வியாபகமான பங்காளா்கள் உள்ளனா். கீழ்க்காணும் இரண்டு விடயங்களும் பிரதானமாக பின்னைய செயற்பாட்டாளர் குழுவுக்கு ஏற்புடையவையாகும்.

முதலாவதாக, பங்காளா்களாக வரக்கூடியவா்கள் அனைவரதும் பலத்தையும், பலவீனத்தையும் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். சில பங்காளா்களிடத்து குறைந்த வளங்கள் இருக்கும் அதேவேளையில் ஏனையோருக்கு இயலுமை அல்லது உத்தி தெரிவுகள் இல்லாதிருக்கலாம். மோதுகையில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் பாா்வையில் சம்பந்தப்பட்டவா்களது நியாயப்பாடானது வேறுபடலாம். ஒருவரது கூட்டுடமைக்கு வேண்டிய வெட்பாளா்களை தெரிவு செய்வது பற்றி சிந்திக்கும் பொழுது சம்பந்தப்பட்டவா்களின் ஆஸ்திகள், செலவுகள் கவனமாக சீா்தூக்கிப் பாா்க்கப்பட வேண்டும். (CIAA 2000).



இரண்டாவதாக, எந்த ஒரு இடையீட்டினது வெற்றிக்கும் வெளிவாரி பங்காளா்களுக்கும், உள்ளகப் பங்காளா்களுக்கும் இடையே நல்ல தொடா்பு இருக்கவேண்டியது முழுக்க முழுக்க இன்றியமையாததாகும்.

வழமையாக, உள்ளக பங்காளா் வளங்கள் தேவைப்படுவதால் மட்டுமே வெளியகப் பங்காளா்களின் இடையீட்டு உத்திகளை ஏற்றுக்கொள்கின்றனா். எல்லா விடயங்களிலும் இரு தரப்பினரும் தத்தமது ஆா்வங்கள் பெறுமானங்கள் தொடா்பாக தெளிவாக இருக்கவேண்டும் (மொட் மன்றம் 1999).

(I) **கொடையாளிகள்** அநேகமான சந்தா்ப்பங்களில் கொடையாளிகள் உள்ளூா் சமாதான செயற்பாட்டாளா்களுக்கு நேரடியாக ஆதரவளிப்பதில்லை. ஆனால் ஐ.நா முகவா் நிலையங்கள் அரசசாா்பற்ற அமைப்புக்கள், திருச்சபை அடிப்படையிலான அல்லது நடவடிக்கை நோக்கிய ஆய்வு அமைப்புகள் போன்ற சா்வதேச நிறுவனங்களுடாகவே வருகின்றன. இந்த வெளியக ஐ.நா. முகவா் நிலையங்கள் அல்லது அரச சாா்பற்ற அமைப்புக்கள் வெளியக கொடையாளிகளுக்கும் உள்ளக செயற்பாட்டாளா்களுக்குமிடையே வாயிற்காவலா்களாக அல்லது அனுசரணையாளா்களாக விளங்குகின்றனா்.

அநேகமான சந்தா்ப்பங்களில் உள்ளக செயற்பாட்டாளா்களின் கண்களுக்கு நேரடியாகத் தோற்றுபவா்கள் வெளிவாரி அரசசாா்பற்ற அமைப்பு தரப்பினரே. வெளியக கொடையாளிகள் நிச்சயமாக உள்ளக செயற்பாட்டாளா்களுக்கு நேரடியாகவே ஆதரவளிக்கமுடியும். உதாரணமாக, பல மேற்கத்திய தூதரகங்கள், மோதுகைப் பிரதேசங்களின் சிறிய உள்ளூா்ச் செய்திட்டங்களுக்கு நேரடியாகவே நிதியளிக்கின்றனா். ஆனால் பொதுவான நியமமானது பாரிய செய்திட்டங்களுக்கு சா்வதேச அரச சாா்பற்ற அமைப்புக்கள் அல்லது ஐ.நா. முகவா் நிலயங்களுடாக ஆதரவளிப்பதேயாகும்.

சா்வதேச அரசசாா்பற்ற அமைப்புகளுக்கு சரியான கொடையாளிகளுடன் பணியாற்றுவது மிகவும் தீா்மானகரமான முக்கியத்துவமுடையதாகும். இந்த அரசசாா்பற்ற அமைப்புக்கள் அல்லது ஆராய்ச்சி நிறுவகங்கள், அமைப்பின் தலைமையகத்துக்கும் உள்மைய செயற்பாடுகளுக்கும் அடிப்படை நிதியையும், அதனுடன் கூட குறைநிரப்பியாக மோதுகை மாற்றுநிலையாக்கங்களுக்கும், சமாதானத்தை உருவாக்கும் செய்திட்டங்களுக்கும் தொடா்பற்ற நெகிழ்வுத்தன்மையான நிதியைப் பெற்றுக்கொள்ளும்போது மிகவும் வினைத்திறனுடன் செயலாற்றுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் (EU)ஒரு கொடையாளி என்றவகையில் நெருக்கடி பிரதேசங்களில் பணியாற்றும் ஐரோப்பிய அரசசாா்பற்ற அமைப்புகளுக்கு நிதிகளை வழங்கிவருகின்றது. EU வின் பயனற்ற அதிகார இனத்துக்குரிய கருவியில் இரண்டறக்கலந்துள்ள சிக்கலான நிதியளிப்பு நடவடிக்கை முறைகள, கொடுப்பனவு தாமதங்கள் ஆகியவை EU வினால் நிதியளிக்கப்பெறும் அரசசாா்பற்ற அமைப்புகள் உள்ளூா் சமாதான தொகுதிகளின் தேவைகளை நெகிழ்வுத் தன்மையுடன் நேரகாலத்தில் கவனிப்பதை மிகவும் கடினமாக்குகின்றன. அநேகமான சந்தா்ப்பங்களில் தனிப்பட்ட அரசாங்க கொடையாளிகள் நிலைமையின் தேவைக்கேற்ப தமது நிதியை சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. கொடையாளிக்கும், சா்வதேச அரசசாா்பற்ற அமைப்புகளுக்குமிடையே போதுமான நம்பிக்கையும் அத்துடன் பொதுவான தொலை நோக்கும் இருக்கும்போது இது மேலும் வினைத்திறனுள்ளதாகின்றது.

(II) வெளிவாரிச் செயற்பாட்டாளா்கள் வெளிவாரி சுவடு 1 செயற்பாட்டாளர்கள், வழமையாக ஐ.நா முகவா் நிலையங்கள், ஐ.நா தூதரகங்கள், ஐரோப்பாவிலுள்ள பாதுகாப்பு கூட்டிணைப்புக்கான அமைப்புபோன்ற (OSCE) பிராந்திய அமைப்புகள் அல்லது தனிப்பட்ட அரசுகளாகும். வெளியக சுவடு 11 அல்லது சுவடு 111 செயற்பாட்டாளர்கள் வழமையாக சா்வதேச சமாதான அமைப்புக்கள் அவற்றுடன் அபிவிருத்தி பணிக்கான அ.ச.நிறுவனங்கள், செயல்நோக்கிய ஆராய்ச்சி நிறுவகங்கள், அல்லது திருச்சபை அடிப்படையான அமைப்புக்களாகும். இந்த செயற்பாட்டாளா்கள் வழமையாக வாயில்காப்போராக, வெளிநாட்டுக் கொடையாளிகளுக்கும், உள்ளூா் சமாதான செயற்பாட்டாளர்களுக்கும் இடையே தொடா்பை அனுசரணையாளா்களாக பணியாற்றுகின்றனா். உள்ளூா் பங்காளா்களைத் தெரிவுசெய்வதிலும், ஆதரவளிப்பதிலும் அவா்கள் உதவியாக இருக்கும் அதேவேளையில் கொடையாளிகளுடன் உள்ளூா் பங்காளா்கள் நேரயாகத் தொடா்புகொள்வதை பயனுறுதியுள்ள வகையில் தடை செய்வதன்மூலம் அவா்கள் இடையூறுசெய்யவும் முடியும். எவ்வாறாயினும், வெளிவாரி கொடையாளிகளுடன் நேரடித்தொடா்புகளை வைத்திருப்பது சிக்கலான நடவடிக்கை முறைகள் காரணமாகவும், வேறுபடும் கலாசாரங்கள் காரணமாகவும் உள்ளூா் பங்காளா்களுக்கு அடிக்கடி பிரச்சினைக்குரியதாக இருப்பதனால் சா்வதேச அரசசாா்பற்ற அமைப்புக்களின் வசதிசெய்துகொடுக்கும் பணி அநேக சந்தா்ப்பங்களில் தேவைப்படும்.

மேலும், முறைவழி நோக்கிய மோதுகை மாற்றுநிலையாக்க அணுகுமுறைகளைச் செயற்படுத்தும் வெளிவாரி இடையீட்டுச் செயற்பாட்டாளா்கள் அவா்கள் போதிப்பதுபோலவே நடந்துகொண்டால் மட்டுமே உள்ளூா் செயற்பாட்டாளா்களுக்கு அவா்கள் நம்பகமான பங்காளா்களாக விளங்கமுடியும். இவ்வாறாக அவா்களும் தமது சொந்த அமைப்பினுள்ளேயே சமாதானத்தை உருவாக்கும் அணுகுமுறை குறித்த அவா்களது கோட்பாட்டை செயற்படுத்திக்காட்டுதல் வேண்டும். இது இவ்வாறில்லாவிடில் சிவில் சமூக பிரதிநிதிகள் விரைவில் இதனை அறிந்துகொண்டு அவா்களைப் பாரதூரமாக கருத்திற்கொள்ளமாட்டாா்கள்.

(III) **உள்ளூா் பங்காளா்கள்** உள்ளூா் சமாதான செயற்பாட்டாளா்களுக்கு உதவுவதற்கு விழையும் வெளிவாரி இடையீட்டாளா்களுக்கு கடினமான வினாவாக இருப்பது எந்த சமாதான செயற்பாட்டாளா்களுக்கு ஆதரவளிப்பது சிறந்தது என்பதே ஆகும். அநேகமான சா்வதேச அரசசாா்பற்ற

அமைப்புக்கள் அல்லது ஆராய்ச்சி நிறுவகங்கள் தமது சொந்தத் தொகுதியினுள் இருக்கும் மோதுகைப் பிரதேசத்திலுள்ள மக்களுடனும், அமைப்புக்களுடனும் இணைப்பு பெற்றுக் கொள்ளவே முயல்கின்றன. இவ்வாறாக, திருச்சபை அடிப்படையான அமைப்புக்கள் உள்ளூர் திருச்சபைகளுக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் ஆராய்ச்சி நிறுவனங்கள் கல்விசார் மேல் மட்டத்தினருடன் பணியாற்ற விழைகின்றனர்.

அநேகமான சந்தர்ப்பங்களில் ஏனைய அளவுகோல்களும் ஒரு பாத்திரத்தை வகிக்கின்றன. உதாரணமாக, இடையீட்டாளரின் மொழியில் பேசமுடியும் என்ற ஒரே காரணத்தாலும், மேற்கத்திய சிந்தனைகளுக்கு ஈடுகொடுக்க முடியும் என்பதாலும் மட்டுமே உள்ளூர் மக்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். இது நிச்சயமாக ஆபத்தானது. ஏனெனில், குறிப்பாக இந்த மக்களே பல முக்கியமான உள்ளூர் தொகுதிகளை இடையீட்டாளர்கள் அணுகுவதற்குத் தடையாக விளங்குகின்றனர். கல்வி கற்ற, துடிப்பான, நகர மேல் மட்டத்தினர் பெரும்பாலும் யார், எவருடன் பேசுவது என்பதைத் தீர்மானிக்கும் வாயில் காப்பாளர்களாகப் பணியாற்றுகின்றனர். ஆகவே, இந்த உள்ளூர் வாயில்காப்போரின் செல்வாக்கைக் குறைப்பதற்கான விசேட கவனம் இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் உள்ளூர்ப் பங்காளர்களை எவ்வாறு தெரிவு செய்வது? கடந்த ஆண்டுகளின் அனுபவங்கள் குறிப்பிட்ட சில குழுக்கள், மோதுகை மாற்றுநிலையாக்க சமாதான உருவாக்கல் மீதான சவால்களை பயனுறுதியுடன் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவருவதில் மிகவும் குறிப்பாகப் பொருத்தமானவை என்பதைக் காட்டியுள்ளன. முதலாவது தட மட்டத்தில் பிரதான மோதுகைத் தரப்பினருடன் நெருங்கிய தொடர்பைக்கொண்ட அல்லது மோதுகைத் தரப்பினுள்ளிருந்தே வசதி செய்து கொடுக்கும் முயற்சிகளில், உரையாடல் வேலைத்திட்டங்கள் அல்லது மோதுகைத் தீர்வு செயலமர்வுகளில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களுடன் ஒருவரால் பணியாற்ற முடியும். தடம் II, தடம் III மட்டங்களில் உள்ளூர் சமாதான மனித உரிமைக்குழுக்கள், சமாதான ஆதரவுப் பெண்கள் குழுக்கள், பாரம்பரியமாக அதிகாரங்களைக்கொண்டோர், திருச்சபைகள், ஊடகங்கள், தொழில்சார் அமைப்புக்கள் அத்துடன் உள்ளூர் வியாபார சமுதாயம் அல்லது குறிப்பாக பிரபலமான நல்ல தொடர்புகளையுடைய தனிநபர்கள் ஆகியோரே மிகவும் ஆர்வமிக்க செயற்பாட்டாளராவார்கள்.அத்தகைய குழுக்களை இனங்காண இடையிடுவோரின் முயற்சியில் வெவ்வேறு கருவிகள் பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக, தற்போதுள்ள அல்லது இனிமேல் தோன்றக்கூடிய குழுக்கள் தொடர்பான வெளிப்புற பகுப்பாய்வு மூலம் பயனுள்ள தகவல்களைப் பெறமுடியும். அத்தகைய ஒரு ஆய்வினைக் களத்தில் தொகுக்கப்பட்ட பங்கேற்பு சமாதானச் செயற்பாட்டாளர் பதிவேட்டுடன் இணைக்கலாம்.



வழமையாக, மக்களையும் அமைப்புக்களையும் தெரிவு செய்வதற்கான சிறந்த வழி, தெரிவினை அவர்களிடமே விட்டுவிடுவதாகும். ஒரு தெரிவுமுறையானது, குறிப்பிட்ட இடைவரு பிரதேசத்திலுள்ள சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளல், அவர்களிடம் எந்த செயற்பாட்டாளர்கள் பொருத்தமானவர்கள் என்றும், திட்டமிடும் முயற்சிக்கு அழைப்புவிடுப்பதற்கு அவர்கள் யாரைப் பரிந்துரை செய்வார்கள் எனவும் கேட்டல் என்பவற்றை உள்ளடக்கும் இத்தகைய வினாவெழுப்பல் பெரும்பாலும் மிகவும் பெறுமதிமிக்க, இது உடைமை உணர்வினை ஒவ்வொருவரிடத்தும் அதிகபட்சப்படுத்தும் முறைவழி ஒன்றின் ஆரம்பமாகவும் இருக்கும். ரொன் கிரேபில் என்பவர் தலையீட்டின் நுண்ணியல் நிலையின் மட்டத்தில் அத்தகைய ஒரு முறைவழி வடிவமைப்புக்கான பயனுள்ள வினாக்கள் சிலவற்றையும், முறையியல் பற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளார். (ரொன் கிரேபில்லின் பங்களிப்பைப் பார்க்கவும்).

குழுக்கள் அடையாளம் காணப்பட்டதும் உள்ளூர் குழுக்களுக்கு முதன்மை வழங்கி, கீழ்வரும் தெரிவு அளவுகோல்கள் பிரயோகிக்கப்படவேண்டும். குழுக்கள்

- அமைதியான மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டும்.
- நாட்டினுள்ளேயே இயங்கவேண்டும்.

- சுய முனைப்பைக் காட்டவேண்டும்.
- செய்திட்டப் பணிகளுக்கு ஒரு நிலையான பங்களிப்பை வழங்குவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தவேண்டும்.
- சமூகம் சம்பந்தப்பட்ட அனைத்தையும் (பல்லின, பால்நிலை சமத்துவம் பேணப்பட்ட) பிரதிநிதித்துவப்படுத்தவேண்டும்.
- அரசாங்கங்களுக்கு முற்றிலும் கட்டுப்படாமல் சுயாதீனமாய் இருத்தலை பேண வேண்டும்.
- அடிப்படை ஜனநாயக விதிகளைப் பின்பற்றவேண்டும்.

உள்ளூர் கூட்டுடமையாளர்களைத் தெரிவுசெய்வதற்கான அளவுகோல்களும் நிறுவனங்களின் சொந்தக் கொள்கைகளுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும். ஒத்த மனநிலையுடைய அமைப்புகளுடன் பணியாற்றுவது பயனுறுதி மிக்கதென அனுபவம் காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், ஆதரவளிப்பதற்குப் பொருத்தமான உள்ளக செயற்பாட்டாளர்கள் அவ்விடத்தில் இல்லாதிருக்கும் போது என்ன செய்ய முடியும்? வழமையாக சிவில் சமூகத்துக்கு அதிகாரமளிக்கும் எண்ணக்கரு அது ஏற்கனவே உள்ளதென்றும் பகுதியாக ஒழுங்கமைக்கப்பட்டது என்றுமே அனுமானிக்கின்றது. எனினும், அவ்விடத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் இல்லாதபோதும் கூட, சிவில் சமூகத்துக்கு ஆதரவளிக்க முடியுமென சோமாலியா சூழ்நிலை மீண்டும் எடுத்துக்காட்டுகின்றது.

1992 இல் LPI சோமாலியாவில் பணியில் ஈடுபடத் தொடங்கிய போது மேற்கூறப்பட்ட தகவு திறன்களைப் பூர்த்தி செய்த உள்ளூர் குழுக்கள் எதுவும் இருக்கவில்லை. இதன் விளைவாக LPI ஆனது தனிப்பட்ட ஆர்வலர்களுக்கும், ஆசிரியர்கள் அல்லது கலைஞர்கள் போன்ற தொகுதிகளைச் சார்ந்த பெருங் குழுக்களுக்கும் ஆதரவளிக்கும் அதே வேளை தமது சொந்த பயிற்றுநர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றையும், அது நன்றாக இன்னும் ஒழுங்கமைக்கப்பட்டிராவிடினும் கூட, செயற்படுத்த உத்தேசித்தது. இது பல நன்மையான விளைவுகளைக் கொண்டதாக அமைந்தது. கோத்திரக் குழுமங்கள் சாராத குழுநிலைகளின் அடிப்படையிலான தனிநபர்கள் ஒன்றாக வரமுடியும். வேறுபட்ட மக்களை வெறுமனே ஒன்றாகக் கொண்டு வருவது தன்னளவில் ஒரு இணக்கப்பாட்டு முயற்சியாகாது. மேலும், குழுக்கள் உருவாதல் சிலவேளைகளில் செயலமர்வுகள் மூலம் இலகுபடுத்தப்படலாம் என LPI கண்டறிந்துள்ளது. உதாரணமாக 1999 இல் ஜிபூற்றியில் திரண்டு சோமாலிய அரசாங்கத்தை நிறுவிய பேராளர்களில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்டோர் LPI இனாலே பயிற்றப்பட்டவர்கள் என்ற உண்மை பல செயற்பாட்டாளர்களின் பயனுறுதிமிக்க வலுவளிப்பு அணுகுமுறையின் மாபெரும் வெற்றியாகும்.



## 2.5 உரிய நேரம் குறித்தல்: நீண்ட காலப் பணிகளுக்கான தேவையும் சந்தர்ப்ப சாளரங்களும்.

மோதுகை மாற்றுநிலையாக்கம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பல் குறித்த இலக்கியங்களில் பெரும்பகுதி பயனுறுதி மிக்கவகையில் தலையிடுவதற்கான நேரங்குறித்தல் தொடர்பான கலந்துரையாடல்களாகவே உள்ளன. பல வருடங்களாக தனிநபர்கள் தீர்வுக்கான மோதுகைகளின் முதிர்ச்சி பற்றிய பிரச்சினை தொடர்பாக வாதிட்டு வந்துள்ளதுடன், இம்முதிர்ச்சிக்கு ஏற்ப சமாதான இடையீடுகளுக்கு நேரம் கனிந்துள்ளமை பற்றியும் ஆராய்ந்துள்ளனர். சார்ட்மன் மற்றும் ஏனையோர் மோதுகையானது தீர்ப்பதற்கான முதிர்வு நிலையை அடைந்திருந்தால் மட்டுமே சமாதான இடையீடுகளால் பங்களிப்பினை நல்கமுடியுமென வாதிடுகின்றனர் (சார்ட்மன் 1989, ஸ்ரெட்மன் 1991).

முதிர்வுநிலை தொடர்பான இந்த எண்ணக்கருவும், அதனால் ஏற்படுத்தப்பட்ட விவாதங்களும் அநேகமான ஆராய்ச்சியாளர்கள் அதனை ஒப்புக் கொள்ளும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அதே வேளையில் இந்த எண்ணக் கரு செயற்பாட்டாளர்களில் இத்தேவை தொடர்பாக கூடுதலான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உதவியுள்ள போதும், இதன் நடைமுறைப் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணம் யாதெனில் முதிர்வுநிலையை வழமையாக பிற்செயலால் மட்டுமே ஆராயமுடிவதுடன் விளைவுகளின் வெற்றி தொடர்பான கேள்வியிலிருந்து வேறுபடுத்தியறிவது அனுபவரீதியாக மிகவும் கடினமாகும். இறுதியில் அது கூறியது கூறல் ஆகவே அமைகிறது. மோதல் முதிர்வடைந்திரா விட்டால், வெற்றிகரமான சமாதான இடையீட்டுக்கு சந்தர்ப்பமில்லை. சமாதானத்துக்கான இடையீடு வெற்றி பெற்றால், அப்போது மோதுகை முதிர்வடைந்திருத்தல் வேண்டும். (கிளிபோர் 1994)

மேலும் முதிர்வுநிலை பற்றிய இந்த எண்ணக்கருவில் அளவுக்கு அதிகமாகக் கவனம் செலுத்தும்போது, வெளிவாரி செயற்பாட்டாளர்கள் முதிர்வுத் தருணம் வரும் வரை தொடர்ந்தும் காத்திருப்பதால், அவர்கள் எப்போதும் செயலற்று இருக்க வேண்டிய ஆபத்தும் உண்டு (பவென் ஹோல்ஸ் 1998).

சமாதான உருவாக்கலுக்கான மாற்றுநிலையாக்க முறைவழி நோக்கிய அணுகுமுறைகளின் பரிணாம வளர்ச்சியுடன், அநேகமான கல்விமான்கள், செயற்பாட்டாளரிடையே முதிர்வுநிலை எண்ணக்கரு முக்கியத்துவம் இழந்துவிட்டது. பல்வேறு உள்ளூர் சர்வதேச இடையீடுகளினூடாக சமாதான உருவாக்கலுக்கும், மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்குமான நீடித்திருக்கக்கூடிய கட்டமைப்புக்களை தாபிக்கும்பொருட்டான நீண்டகாலப் பணிகளை நோக்கியே கவனம் திரும்பியுள்ளது. அதன் விளைவாக, இப்போது, ஒட்டுமொத்த செயல்முறையில் பல்வேறு நேரங்களில் பல்வேறுபட்ட இடையீடுகளின் முழுமொத்தமாக நீண்டகால கட்டமைப்புகள் கருதப்பட்டு வருகின்றன. இந்த நகர்வு மூலமாகவே நாம் வெற்றிகரமான மோதுகை மாற்றுநிலையாக்கங்களை அணுகமுடியும் (பிறீஸ்டவ் 2000).



முதிர்வு நிலை எண்ணக்கருவுக்கு இதனால் என்ன பயன்? முதிர்வு நிலை இன்னும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு எண்ணக்கருவாக இருப்பினும் நவீன சமாதான இடையீடுகளுக்கேற்றவாறு மாற்றப்பட்டு திருத்தியமைக்கப்படவேண்டும் என்பதில் கருத்தொருமிப்புக் காணப்படுகின்றது. முதிர்வு தருணங்கள் என்பதற்கு (சாற்மன் 1989) பதிலாக சந்தர்ப்பத்துக்கான சாளரம் என்ற பதம் பயன்படுத்தப்படவேண்டும். ஏனெனில் தருணம் என்ற பதம் மிகவும் குறுகியகாலக் கட்டுக்கோப்பைக் குறிப்பதனால் இடையீடுகளுக்கான சந்தர்ப்பங்களும் மட்டுப்படுத்தப்படுகின்றன. சாளரங்களைத் திறந்து மூட முடியும். அத்துடன் இடையீட்டுக்கான சந்தர்ப்பங்கள் வரும், போகும். அவை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு ஆராயப்படவேண்டுமென்ற யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது.

மேலும் முதிர்வு நிலை எண்ணக்கருவானது நவீன நிலைமாற்றம் நோக்கிய சமாதான உருவாக்கல் தொடர்பான அணுகுமுறைகளின் யதார்த்தங்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படவேண்டும். இவை, சமாதான இடையீட்டாளர்கள் ஒரு சாளரம் முற்றாகத் திறக்கும்வரை காத்திருக்கலாகாது, ஏனெனில் செயற்பாட்டாளர் தயாராவதற்கு முன்னரே சாளரம் மூடிவிடக்கூடும் என்பதைக் காட்டியுள்ளன. செயற்பாட்டாளர்கள், நீண்டகாலப் பணி ஒன்றை நடைபெற்று வரும் சந்தர்ப்பத்துக்கான வாய்ப்புள்ள சாளரங்களின் பகுப்பாய்வுடன் இணைத்தல் வேண்டும். சந்தர்ப்பங்களுக்கான சாளரங்களை முறையாக இனம் காண்பதற்கு நீண்ட கால ஈடுபாடே செயற்பாட்டாளர்களுக்கு உதவுவதுடன் நேரகாலத்தோடு சமாதான இடையீடுகளைப் பயன்படுத்துவதற்கும் வசதியளிக்கிறது (பவென்ஹோல்ஸ் 1998).

மோதுகை ஒன்று அமைதியான முறையில் நிலைமாற்றப்படுவதற்கு முன்பும், உத்தியோக பூர்வமாக சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பும் சந்தர்ப்பதுக்கான பல சாளரங்கள் திறந்து மூடக் கூடுமென்றும் செயற்பாட்டாளர்கள் கண்டறிந்துள்ளனர். இறுதியில் சந்தர்ப்பத்துக்கான

சாரளங்களை சமாதானம் என்ற வீட்டின் சுவர்களிலுள்ள செங்கற்களாகவே நோக்கவேண்டியுள்ளது. உதாரணமாக, ஒஸ்லோ செயல்முறை என தற்போது அறியப்படும், மத்திய கிழக்கில் நோர்வே அரசசார்பற்ற அமைப்புக்களால் அடையாளங்காணப்பட்டு பின்னர் நோர்வே வெளிநாட்டு அமைச்சினால் ஆதரவளிக்கப்பட்ட சந்தர்ப்பத்துக்கான அத்தகையதொரு காரணத்தை மிகவும் பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தியுள்ளது. அப்பிராந்தியத்தின் மிக அண்மைக்கால அபிவிருத்திகள் உலகின் சிரமமான இப்பகுதியில் வெற்றிகரமான மோதுகை மாற்றுநிலையாக்கம் ஒன்று ஏற்பட வேண்டுமாயின் இன்னும் அதிகமான தேவைகள் உள்ளன, எனினும் ஒஸ்லோ செயல்முறை முக்கியமான ஒரு சாளரத்தைப் பயன்படுத்தியுள்ளதென்பதைக் காட்டியுள்ளன.

## 2.6 முறைவழிகள் மற்றும் கட்டமைப்புகளை உருவாக்குதல் என்ற ரீதியில் சிந்தித்தல்

ஒஸ்லோ முறைவழி உதாரணம் மேலும் நீண்டகால முறைவழிகள் தொடர்பில் சிந்திக்கவேண்டிய தேவை பற்றியும், சமாதானமான மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கும் தேவையான இயக்கவியலை தாபிக்கக்கூடிய கட்டமைப்புகளை உருவாக்குவதுபற்றியும் எடுத்துக்காட்டுகிறது. ஒஸ்லோ முறைவழியின் பங்களிப்பானது தானாகவே சமாதான உடன்படிக்கையுடன் அதிகமாக தொடர்புற்றிருக்காவிடினும், முறைவழி ஆரம்பிக்கப்பட்டபோது தாபிக்கப்பட்ட சமாதான உருவாக்கலுக்கான கட்டமைப்புகளுடன் தொடர்புற்றிருந்தது. மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு வசதிசெய்துகொடுக்கும் முறைவழிகளுக்கும், கட்டமைப்புகளுக்குமான மற்றுமொரு உதாரணம் மொசாம்பிக்கின் சமாதான உருவாக்கல் முயற்சிக்கு இட்டுச்சென்ற பல்வேறு மோதுகைச் செயற்பாட்டாளர்களின் வெற்றிகரமான இணக்கப் பேச்சாகும். மொசாம்பிக்கினுள்ளேயும், வெளியேயும் இணைந்து செயற்படும் பல வேறுபட்ட சுவடு 1 சுவடு 11 செயற்பாட்டாளர்கள் இடையீடுகளின் பல்வேறுமட்டங்களில், குறிப்பாக பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தாலும் குறிப்பிடப்பட்ட முறைவழிகளிலே பெறுமதிமிக்கதாகக் காணப்பட்ட இணக்கப்பேச்சு கட்டமைப்புகளையும், சமாதான செயல்முறைகளையும் நிறுவுதில் வெற்றிகண்டனர். 1992 இல் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்னரும் இக்கட்டமைப்புக்கள் தொடர்ந்தும் இருந்த காரணத்தாலும் ”மொசாம்பிக் செயல்முறை” குறிப்பிடத்தக்கதாக இருந்தது. (பவ்வென்ஹோல்ஸ் 2000) உள்ளூர் மட்டத்திலிருந்து வன்முறை அச்சுறுத்தல்கள் பெருமளவில் இருந்தபோதும், பிரதான தரப்பினர் எவரும் மொசாம்பிக்கில் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவது குறித்து பாரதூரமாக சிந்திக்காதிருப்பதை உறுதிசெய்வதை இணக்கப்பேச்சு முறைவழியின்போது தாபிக்கப்பட்ட மோதுகை மாற்றுநிலையாக்கக் கட்டமைப்புக்கள் தொடர்ந்தும் உறுதி செய்துள்ளன. (பவ்வென் ஹோல்ஸ் 2000b).

இவ்வுதாரணங்கள் பயனுறுதிமிக்க மோதுகை மாற்றுநிலையாக்கங்களுக்கு நெகிழ்வுத்தன்மையுடனான ஆனால் நீடித்திருக்கக்கூடிய கட்டமைப்புகள் தேவை என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. இது அந்தக் கட்டமைப்புக்களை கட்டியெழுப்புவதன் மூலமும் பெருநிலையில் பேணுவதன் மூலமும் சமாதான முறைவழிகளுக்கு உதவுகிறது. இரு மட்டங்களிலும் இக்கட்டமைப்புக்களை உருவாக்குவதனூடாகவும் அத்துடன் பெருநிலை மட்டத்திலும் செய்யப்படவேண்டும். பின்னையது தொடர்பில் லுக் ரேச்லெர் (2002 ப.13)இடையீடுகளைச் சுற்றி எழுப்பப்படவேண்டிய நான்கு சமாதான மேம்பாட்டு கட்டமைப்புகளைக்கொண்ட ஒரு தொகுதியை பிரேரணையாக முன்வைத்துள்ளார்.

முதலாவது அரசியல் இயல்பு சம்பந்தமானது: அது ஜனநாயத்தை வலுவுடன் ஒருங்கு நிலைப்படுத்துவது தொடர்பானது. அத்தகைய ஒரு ஜனநாயகம் பத்து கட்டத் துண்டுகளையும் உள்ளக, வெளிவாரி ஆதரவு முறைமைகளையும் கொண்டதாகும். நீடித்திருக்கக்கூடிய சமாதானத்தை தாபிப்பதற்குத் தேவையான இரண்டாவது கட்டமைப்பானது பயனுறுதிமிக்க, சட்ட நிலைத்தகவுள்ள மீட்டல்திறன் வாய்ந்த நீதி முறைமையாகும். மீட்டல்திறன் வாய்ந்த நீதிமுறைமையை உருவாக்குவது

ஹவார்ட் சேர் அவர்களால் வலுவாக ஊக்குவிக்கப்பட்டுள்ளது. நிறுவப்பட வேண்டிய மூன்றாவது கட்டமைப்பானது சமூக, சுயாதீன சந்தை முறைமையாகும். மத்திய மயப்படுத்தப்பட்ட அல்லது முற்றிலும் சுயாதீன சந்தைப் பொருளாதார சூழலைவிட சமூக, சுயாதீன சந்தை முறைமையில் நீடித்திருக்கக்கூடிய சமாதானத்தை தாபிப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகும். தனியார் மயப்படுத்தல் செயல்முறையும், துடிப்பான பொருளாதார சமூகத்தை உருவாக்குவதும் மிகவும் முக்கியமானது. கவனம் செலுத்த வேண்டிய நான்காவது கட்டமைப்பானது கல்வி, தகவல் தொடர்பாடல் முறைமையாகும். இங்கு நாம் பாடசாலைக் கல்வியின் அளவு, பாகுபாட்டு மட்டம், பாடங்களின் பொருத்தமான தன்மை, கொண்டுள்ள மனப்பாங்கு, ஊடகக் கட்டுப்பாடு, பத்திரிகையாளரின் தொழில்சார் மட்டம், மோதுகைநிலைமாற்றங்களில் ஆக்கபூர்வமான பங்குவகிக்கும் அளவு, அழிவேற்படுத்தும் வதந்திகளைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றை நோக்குகின்றோம். இறுதியாக ஒரு திருப்திகரமான முறையில் அகதிகளின் பிரச்சினையை கையாளுவதற்கான கட்டமைப்புகள் அவசியப்படுகின்றன.

## 2.7 சரியான ஆட்களைப் பணிக்கமர்த்துதல்: தகைமை எதிர் அர்ப்பணிப்புக் கடப்பாடு

அனைத்து இடையீட்டு மட்டங்களிலும் தகைமை, கடப்பாட்டு உறுதி ஆகிய இரண்டையும் கொண்ட ஆளணியினர் தேவை. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மற்ற எல்லாவற்றையும் விட இவ்விரண்டு விடயங்களுமே மிகவும் முக்கியமானவை (மொற் மன்றம் 1999). பிரச்சினையுள்ள பிரதேசங்களில் பரவலாக காணப்படும் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் சவால்களை பயனுறுதியுடன் கையாளுவதற்கு தகைமை மட்டும் போதுமானதல்ல. கடப்பாட்டு உறுதி, வெளிப்படைத் தன்மை, நெகிழ்ச்சி, சுய நம்பிக்கை ஆகியவை, தம்மளவில் சமாதான உருவாக்கல் முயற்சியில் அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்வதற்கு செயற்பாட்டாளர் ஒருவருக்குப் போதுமானவையல்ல. இவ்விரு தகைமைகளும் கட்டிறுக்கமான பயிற்சியூடாக இணைக்கப்படல் வேண்டும்.



அத்தகைய ஆட்களைப் பெற்றுக் கொள்வதற்கு திறமை மிகு களப் பணியாளர்களை பதவியில் அமர்த்த வேண்டும். இதில் வேட்பாளர்கள் தம்மைப்பற்றியும், தமது தூண்டல்கள், கடப்பாட்டு உறுதி, அனுபவம், கல்வி, பயிற்சித்திறன்கள் மற்றும் தகைமை என்பன குறித்தும் எழுதக்கூடிய அனைத்துமடங்கும் விண்ணப்பப்படிவம் உள்ளடக்கப்படவேண்டும். அத்துடன் அதில் சம்பந்தப்பட்ட தகவல் சான்றாதரவாளர்களிடமிருந்து பின்னூட்டல்களையும் கண்டிப்பாகப் பெறுதல் வேண்டும். மேலும், முறையான ஓர் ஆட்சேர்ப்பு தனிப்பட்ட நேர்முகப் பரீட்சைகளையும், ஆட்சேர்ப்புக் கருத்தரங்குகளையும் உள்ளடக்கவேண்டும். (குருஹொன்ஜா 2000).

**பெட்டி 2 : OSCE செயற்பணி உறுப்பினர்கள் பொதுவான ஆகக்குறைந்த தேவைகள்**

எந்த ஒரு OSCE களச் செயற்பணியில் ஈடுபடும் தகைமை பெறுவதற்கும் OSCE விண்ணப்பதாரிகள் கீழ்க்காணப்படும் ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- ஆங்கிலத்தில் பணியாற்றக்கூடிய ஆற்றல் இருத்தல்
- மிகச் சிறந்த உடல்நிலை
- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருத்தலுடன் கைகளின் இயக்கத்தினால் வாகனங்களை செலுத்தக்கூடிய ஆற்றல் இருத்தல் வேண்டும்
- சொற்சீரிடல் மின்னஞ்சல் அடங்கலாக வின்டோஸ் பிரயோகங்களை செயற்படுத்தும் ஆற்றல் இருத்தல்

- வேறுபட்ட பண்பாட்டு,மத பின்னணிகளைக் கொண்ட, வெவ்வேறு பால்நிலையைச் சேர்ந்த, வேறுபட்ட அரசியல் கருத்துக்களை வைத்திருக்கும் மக்களைக் கொண்ட அணியில் அங்கத்தவராகப் பணியாற்றக்கூடிய திறமையையும், விருப்பத்தையும் வெளிப்படுத்துபவராக இருக்க வேண்டிய அதேவேளையில் பாகுபாடு காட்டாதவராகவும், புறநிலை யதார்த்த நோக்கைப் பேணுபவராகவும் இருத்தல் வேண்டும்.
- பண்பாட்டு கூருணர்வும், தீர்மானமெடுத்தலும்
- அழுத்தத்தின் கீழும் மட்டுப்படுத்தப்பட்ட நோக் கட்டுக்கோப்பினுள்ளும் பணியாற்றக் கூடிய நெகிழ்வுத் தன்மையும் ஆற்றலும்
- பௌதீக ரீதியான கஷ்டங்களை எதிர்த்து சமாளிக்கக்கூடியவராகவும், மட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புடன் கூடிய ஒரு சூழலில் நீண்டநேரம் மேலதிக வேலைகளில் ஈடுபடுவதற்கு இணங்கக்கூடியவராயிருத்தல்.

விரும்பத்தகுந்தது :

- முன்னைய சர்வதேசப் பணி அனுபவம் அத்துடன்∴அல்லது கள செயற்பணிகளில் அனுபவம்
- பிற மொழிகளில் அறிவு
- முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை அனுபவம்
- பேச்சுவார்த்தை / இணக்கப்படுத்தல் அனுபவங்கள் (மூலம் OSCE 2000);

எவ்வாறாயினும், அனைத்து தகைவுத் திறன்களையும் பூர்த்தி செய்துள்ள வேட்பாளர்களைக் கண்டறிவது மிகவும் கடினம். எனவே, சிறந்த குழுக்களை அமைப்பது அவசியம். ஏனெனில் குழுக்களினுள்ளே தனிபட்ட பலவீனங்களை ஈடுசெய்ய முடியும். மிகச் சிறந்த பெண்ணை அல்லது மிகச் சிறந்த ஆணைத் தெரிவுசெய்வதைக் காட்டிலும் மிகச் சிறந்த குழுவைக் கண்டறிவதே சிறந்த அணுகுமுறையாகும். பெரும்பாலும் ஆட்சேர்ப்புகளில் தொழில்சார் தகைமைகளுக்கே மிதமிஞ்சிய கவனம் செலுத்தப்படுகின்றது. பல அமைப்புகளில் செயற்தூண்டலுக்கான அவசியம் குறைத்து மதிப்பிடப்படுகிறது. சில நெருக்கடி வேளைகளில் தனியார் வரையறைகள் ஆனவை சமூக மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கென அந்த நிறுவனத்தின் செயற்பாடாக அமைகின்ற போது ஆளுமைகள் மேலே கூறிய தனிப்பட்ட வரையறைகள் அளவு முக்கியமாகும் என்பது அனுபவ வாயிலாக தெரிகிறது (கிரேமர் 2001).



## 2.8 ஒத்துழைப்பும் கூட்டிணைப்பும்: சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான உபாயம்சார் முன்னணிகளை இனங்காணல்

ஒத்துழைப்பு, கூட்டிணைப்புக்கான கருப்பொருள்கள் பற்றி பல நுண்ணறிவுத்திறன்களை இது குறித்த எழுத்துக்கள் வழங்குகின்றன. அனைத்து இடையீட்டு மட்டங்களிலுமான செயற்பாட்டாளர்களும், ...... கூட்டிணைப்பின்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். எனினும், நடைமுறையில் ஒருங்கிணைவு எப்பொழுதும் மிகவும் சரியாக நடைபெறுவதில்லை. ஒவ்வொருவரும் தாம் தாம் ஒருங்கிணைவதை விரும்புகிறார்களே தவிர, ஆனால் எவரும் பிறரால் ஒருங்கிணைக்கப்படுவதை விரும்புவதில்லை!

ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் பல்வேறுபட்ட, பல்கவனச்செறிவுடைய இடையீடுகள் காலக்கிரமத்தில் உண்மையான, நீடித்திருக்கக்கூடிய மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கு இட்டுச் செல்லும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன (பிறஸ்டவ் 2000, பவென்ஹோல்ஸ் 2000). எனினும், இத் தேடல் முடிவுகள் இந்த வேறுபட்ட இடையீட்டாளர்களிடையே காணப்படும் ஒருங்கிணைப்பானது செயல்முறைக்குப் பெறுமதி

சேர்க்குமெனக் கூறமுடியாது. மேலும், ஒருசில நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால் மட்டுமே இவ்வொருங்கிணைப்பு பயனுறுதிமிக்கதாய் இருக்கும். பிரதானமாக, ஒருங்கிணைப்பின் நோக்கம் தெளிவாக இருக்க வேண்டியதுடன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டாளராலும் மதிக்கப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

வன்செயல் மோதுகைகள் உள்ள பலபிரதேசங்களில் ஏற்கெனவே அமைதி காக்கும் செயற்பணி நடைபெற்று வருகிறது அல்லது பல வெளிவாரி செயற்பாட்டாளர்கள் சமாதானம் அல்லது நிவாரண உதவித்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றனர். அமைதிகாக்கும் செயற்பணி ஒன்று இருந்தால் அது வழமையாக ஒரு கூட்டிணைப்பு அலுவலகத்தைத் தாபித்திருக்கும். இந்நிகழ்வுகளில் செயற்பணியுடன் மிகச்சிறந்தவகையில் இணைந்து கொள்ளும் முகமாக உத்திகளை அபிவிருத்தி செய்யும்பொருட்டு அரசசார்பற்ற அமைப்புக்கள் தம்மைத்தாமே ஏதாவது ஒரு வகையான உத்திசார் கூட்டணியில் ஒழுங்கமைத்துக்கொள்வது மிகவும் முக்கியமாகும்.

அரசசார்பற்ற அமைப்புக்கள் ஒத்துழைப்புப் பண்பாட்டை விட போட்டியிடும் பண்பாட்டையே நாடுவதால் பெரும்பாலும் இது ஒரு எளிதான பணியல்ல. இங்கு யுத்தப் பிரதேசத்தில் சமாதானத்துக்கும், உறுதிப்பாட்டுக்கும் ஆதரவளிக்கும் அர்ப்பணிப்புக் கடப்பாடே அனைத்து பக்கங்களிலும் பகைமை நடத்தையை மீறி மேம்படுவதற்கான பிணைக்கும் விசையாக இருத்தல் வேண்டும். வழமையாக அரசாங்க அமைப்புகளை விட அரசசார்பற்ற அமைப்புக்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் நிலவரம் தொடர்பாக மிகவும் ஆழமான தகவல்களைப் பெறக்கூடியநிலை உள்ளது. செயற்பணியினர் இத் தகவல்களை வழமையாகத் தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கே விரும்புவர். தடம் I, II, III செயற்பாட்டாளர்கள் பயனுறுதிமிக்க வகையில் ஒத்துழைக்கவேண்டுமாயின், பொருத்தமான வகிபாகங்கள் மற்றும் நடத்தைகள்பற்றிய தெளிவான வரைவிலக்கணம் ஒன்று அத்தியாவசியமான முன் நிபந்தனையாகும்.



நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரசசார்பற்ற அமைப்புக்கள் குறிப்பிட்ட அடிப்படை நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அமைதியான மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான தமது பங்களிப்பை மேலும் அதிகரிக்கமுடியுமென அறிந்துகொள்வர். பயனுறுதிமிக்க ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை முன்னணி செயற்பாட்டாளர் ஒருவரைப் பெயர்குறிப்பதே ஆகும். இரண்டாவதாக, வெளிப்புற ஒருங்கிணைப்பு முயற்சிகளில் ஈடுபடுவதற்கு முன் அமைப்புக்கள் தமது உள்ளக ஒருங்கிணைப்பு முறைமைகளை மேம்படுத்தவேண்டும். இறுதியாக, அமைப்புக்கள் முறைமையான ஒருங்கிணைப்பு பொறிமுறைகளைத் பயன்படுத்துவதை விட, குறித்துரைத்த நோக்கங்களின்பொருட்டு சந்தர்ப்பத்துக்கு உகந்தவாறு செயலணிகளை வடிவமைப்பதில் நம்பிக்கை வைப்பதே சிறந்ததென அமைப்புக்கள் கருதலாம்.

சர்வதேச செயற்பணியொன்று அவ்விடத்தில் இல்லாதவிடத்து வேறுபட்ட இரு காட்சிகளை நாம் காணலாம். களத்திலுள்ள மிகச் சில அரசசார்பற்ற அமைப்புக்கள் தமது செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கக்கூடிய ஏதோ ஒரு வகையான பணியாற்றும் கட்டமைப்பு ஒன்றினைத் தாபிப்பதற்கு இதுவே வழியாகுமென்பதை உணர்ந்துள்ளதால், ஒன்றோடொன்று ஒத்துழைக்கும் மோதுகைப் பிரதேசம் அந்த அளவுக்குப் பிரபலமாகியுள்ளதால் அங்கு பணியாற்றுவதற்கு விரும்பும் அரசசார்பற்ற அமைப்புக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே போகும். இது வழமையில் நல்ல ஒத்துழைப்புக்குத் தடையாக உள்ளது. எவ்வாறாயினும், அது தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்திற்காகவும், பாதுகாப்பு ஒழுங்கு காரணமாகவும் இருப்பினும் கூட, செயற்பாட்டாளர்கள் ஏதோ ஒரு வகையான கூட்டிணைவில் ஈடுபட வேண்டும்.

சமாதானம், மோதுகை மாற்றுநிலையாக்கம் ஆகியவற்றுக்கு ஆதரவளிக்கும்பொருட்டு அனைத்து மட்டங்களிலுமுள்ள அனைத்து செயற்பாட்டாளர்களையும் ஈடுபடுத்தும் உபாயமுறைசார் கூட்டு ஒன்றினை

உருவாக்குவதே ஒருங்கிணைப்புக்கான சிறந்த வழியாகும். பல அரசசார்பற்ற அமைப்புக்களின் ஏற்கனவே சொல்லப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக இது ஒரு எளிதான முயற்சியல்ல. அநேகமான மோதுகைப் பிரதேசங்களில் ஒருங்கிணைப்பு பொறிமுறையானது சமாதான உருவாக்கல் ஆய்வுகளில் கவனம் செலுத்தாது அளவுக்கதிகமாக பாதுகாப்பு, மனிதாபிமான நோக்கங்களிலேயே கூடுதல் கவனம் செலுத்துகின்றது. எனவே சமாதான செயல்முறைகளுக்கு ஆதரவளிக்கும் ஒரு கட்டமைப்பைத் தாபிப்பது மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு சாதனமாகும். அத்தகைய ஒரு கட்டமைப்பினுள் மிகவும் சிறப்பாகப் பல்வேறு பணிகளைச் செயற்படுத்த வேண்டும்:

- களத்திலுள்ள சம்பந்தப்பட்ட அனைத்து வெளியகச் செயற்பாட்டாளர்களையும் பதிவுசெய்தல்;
- தடம் I, II, III செயற்பாட்டாளர்களுக்கிடையே சொல்லாடல்;
- தகவல் பகிர்வு;
- மோதுகை மாற்றுநிலையாக்கச் சாத்தியவளம் குறித்த சொல்லாடல், வேலைப்பிரிவினை;
- சம்பந்தப்பட்ட உள்ளகச் செயற்பாட்டாளர்களுடன் இணைந்துகொள்ளல்;
- தவறான ஆட்களை (உள்ளக, வெளிவாரி ஓரங்கட்டுதல்;
- மோதுகை நிலைமையில் சமாதான உருவாக்கல் கட்டமைப்புகளுக்கு ஆதரவளித்தல்;

மீண்டும் சோமாலியாவில் LPI இன் அனுபவம் ஒருங்கிணைப்பிலும், ஒத்துழைப்பிலும் உள்ள சிரமங்களை எடுத்துக் காட்டுகின்றது. செயல்முறையின் ஆரம்பத்தில் LPI யும், சோமாலியாவின் ஐக்கிய நாடுகள் செயற்பாடும் (UNOSOM) இடையீடுகளின் வெவ்வேறு மட்டங்களில் பங்குடைமையின் கடினமான சவால்கள் அனைத்தும் அடங்கலான உபாயமுறைசார் பங்குடைமையில் ஈடுபட்டிருந்தன. இந்த உபாய முறைசார் கூட்டு சோமாலியாவில் ஐநாவின் தீர்மானம் எடுத்தலில் முக்கியமான செல்வாக்கு காட்டக்கூடிய அனுகூலத்தை LPI ஐக்கு வழங்கி அதனூடாக ஒட்டுமொத்த சமாதான உருவாக்கல் முயற்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை நல்கியுள்ளது. எனினும், LPI ஆனது அரச களத்திலுள்ள அரசசார்பற்ற அமைப்புத் தொகுதிகளுடன் ஒத்த உபாய முறைசார் கூட்டு ஒன்றினை உருவாக்குவதற்கான வழிவகை ஒன்றையும் கண்டிருந்தால் இம் முயற்சி மேலும் சிறந்த பயனளித்திருக்கும்.

LPI ஐப் பொறுத்தவரையில் இந்த அனுபவத்தால் இரு விளைவுகள் ஏற்பட்டன. ஒரு புறம், வளர்ந்துவரும் இடையீட்டுச் செயற்பாட்டாளர்கள் வட்டத்துடன் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு முயற்சியில் மேலும் ஈடுபடுவதை இடர்மிக்கதாகக் கருதியது. மறுபுறம், இந்த ஐயுறவுவாதம் LPI மீது சிவில் சமூக முகவர் என்றவகையில் பயனுறுதிமிக்க பங்காளர்களாக வரமுயலும் தவறான ஆட்களை ஓரங்கட்டுவதை இலக்காகக்கொண்ட எச்சரிக்கைச் சைகைகளை அனுப்புவதில் ஒருபோதும் சலிப்படையாத ஆக்கபூர்வமான விளைவைக் கொண்டிருந்தது.

## 2.9 முறைவழியை நிலைபேறாக்குதல்

இடையீட்டு வடிவமைப்பின் ஆரம்பத்திலிருந்தே நிலைபேற்றுத்தன்மை என்ற இலக்கு ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இடையீடுகளின் வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு உத்திகள் அவசியப்படும். பேரியல்பு மட்டத்தில் எம்மால் குறுகிய மற்றும் நீண்டகால இடையீடுகளை வேறுபடுத்த முடியும். உதாரணமாக, நிதியளிப்பு அர்ப்பணிப்புக் கடப்பாடு தொடர்பானது. நற்பெயர், வசதிசெய்து கொடுத்தல், இணக்க முயற்சிகள் போன்ற குறுகியகால இடையீடுகள் நிலைபேற்றுத் தன்மையைக் கலந்துரையாடவேண்டிய ஒரு தகவுதிறனாக உருவாக்க வேண்டும் (பவென்ஹோல்ஸ் 1998). மேலும், இடையீட்டின் பேரியல்பு மட்டத்திலுள்ள செயற்பாட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்னர் வெளியேறல் உத்திமுறை ஒன்றை அபிவிருத்திசெய்யவேண்டும். (CA 11 2000). இதனால் அறியப்படுவது யாதெனில்,

உதாரணமாக பொருத்தமான நேரத்தில் இடையீடுகளைத் தொடருவதை உள்ளூர் செயற்பாட்டாளர்களுக்கு அல்லது பிற வெளிவாரி செயற்பாட்டாளர்களுக்கு விட்டுவிடுவதற்குத் வெளிவாரி இடையீட்டு செயற்பாட்டாளர்கள் தயாராயிருத்தல் என்பதாகும். வெளிவாரிச் செயற்பாட்டாளர்களின் ஈடுபாடு அல்லாது முறைவழியே நிலைபேறான தன்மை கொண்டதாயிருத்தல் வேண்டும்.

இடையீடுகளின் அனைத்து மட்டங்களிலும் இடையீடுகள் நீடித்திருப்பதை உறுதிசெய்வது கொடையாளர் முகவர் நிலையங்களுக்கு முக்கியமானதாகும். இதனை நிறைவேற்றுவதற்கு உதவுமுகமாக இரு எளிய வழிமுறையமைப்புகள் உள்ளன. முதலாவதாக, அவர்கள் செயற்படுத்தும் பொறுப்பினை ஏற்றுள்ள தனிப்பட்ட நபர்களுக்குக் குறிப்பிட்ட பணிகளை ஒதுக்குவது அடங்கலான முழுமையான கட்டமைக்கப்பட்ட பின் தொடர் நடவடிக்கை வழிமுறையமைப்புடன் கூடிய இணைந்த செயற்பாட்டுத் திட்டத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இரண்டாவதாக, சம்பந்தப்பட்ட மக்களுக்குத் தொடர்ச்சியான பின்னூட்டலை அளிக்கும் கட்டமைக்கப்பட்ட கண்காணிப்பு முறைமையை அபிவிருத்திசெய்தல் வேண்டும். நம்பிக்கையை அபிவிருத்திசெய்வதற்கும், தொடர்புகள் உருவாக்கப்படுதல் வெற்றியடைவதற்கும் மீண்டும் அறிக்கையிடும் முறைவழி அமைப்பு முக்கியமானதாகும். இது நிலைபேற்றுத் தன்மைக்குச் சிறந்த உத்தரவாதமான அனைத்துத் தரப்பினரும் முறைவழியின் உரிமையாளர்களாக இருப்பதை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

உதாரணமாக, மோதுகைப் பிரதேசத்திலுள்ள சிவில் சமூகங்களை வலுவூட்டுவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நிலைத்திருக்கும் தன்மைத் தொடர்பில் போதிய கவனம்செலுத்துவதில்லை. மக்களுக்கு வலுவளிக்கும் இந்த எண்ணம் அடிப்படையில் சரியானதும், சக்திமிக்கதுமாகும். ஆயினும், அது நிலைத்திருக்கும் தன்மையை எய்தக்கூடிய குறிப்பான ஏதாவது முறைவழியை இலக்காகக்கொண்ட ஏதோவொரு வகையான முறையியலையும் உள்ளடக்கவேண்டும். வலுவளித்தலின் நீண்டகாலச் சென்றடைதல் விளைவுகளில் நம்பிக்கைவைக்கும் அதேவேளையில் நிலைத்திருப்பதற்கான பயனுறுதிமிக்க இடைக்கால உத்திகளை அபிவிருத்திசெய்தலும் அவசியமாகும். மக்களுக்கு வலுவளித்தல் சரியான அணுகுமுறையாகும். ஆயினும், இம் முறைவழிகள் நிலைத்திருக்கவேண்டுமாயின் இம்மக்களுக்கும் நிலைத்திருக்கக்கூடிய கட்டமைப்புக்கள் அவசியமாகும். இதில் குறுகிய தவணையிலிருந்து நடுத்தவணைவரை பயிற்சி உதவமுடியும். இதனை உள்ளூர் குழுக்களின் தேவைகளுக்கு நெகிழ்வுத்தன்மையுடன் பிரதிவிளைவுகாட்டக்கூடிய, இறுதியில் அமைதியான மோதுகை மாற்றுநிலையாக்கத்துக்கான நிலைத்திருக்கக்கூடிய உள்ளூர் கட்டமைப்புகளை தாபிப்பதற்கு இட்டுச்செல்லும் பொருத்தமான பின்தொடர் நடவடிக்கை வழிமுறையைக் கட்டியெழுப்புவதன் மூலம் எய்தமுடியும்.



முறைவழிகளை மேலும் நீடித்திருக்கக்கூடியதாக ஆக்குவதற்கான மற்றுமொரு அணுகுமுறையானது பொருத்தமான வலையமைப்புகளையும், உடனுழைப்புப் பங்காளர்களையும் இனங்காண்பதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதாகும். எனினும், ஒத்துழைக்கவேண்டுமென்ற காரணத்தால் மட்டுமே ஒத்துழைப்பதால் எவ்விதமான பயனுமில்லை. மாறாக, சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்காளர்களுக்கும் அதிகரிக்கப்பட்ட ஒரு மதிப்பு இருந்தால் மட்டுமே ஒருங்கிணைப்பு அல்லது உடனுழைப்பு தாபிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஆதரவளிக்கும் கட்டமைப்புக்குளூடாக நிகழ்ச்சித் திட்டங்களை நிலைக்க வைக்கும் பொருட்டு உத்திமுறைசார் கூட்டின் பயனை விரிவாக எடுத்துக்காட்டுவது அவசியமாகும்.

## 2.10 கற்றல் வழிமுறையமைப்புகளை உருவாக்குதல்

மோதுகை மாற்றுநிலையாக்கம் அல்லது சமாதான உருவாக்கல் துறை தொடர்பான பணிகள் பெருமளவு அறிவைப் பிறப்பிக்கின்றன. எவ்வாறாயினும், இப்பாடங்கள் அமைப்புகள், நிறுவனங்களால் அல்லாது தனிநபர்களாலேயே கற்றுக்கொள்ளப்படுகின்றன. அதன் விளைவாக ஒரு நிறுவனத்திலிருந்து மக்கள் விலகும்போது அவர்கள் கற்ற பாடங்கள் அனைத்தும் மறைந்துவிடுவதுடன் அடுத்து வருவோரால்

புதிதாகக் கற்கப்படவேண்டியுள்ளது. பெரிய நிறுவனங்களின் மதிப்பீட்டு அலகுகளிலும் பெருமளவு அறிவு திரண்டுள்ளது. ஆயினும், வழமையாக அவர்கள் மதிப்பீடுசெய்த தனிப்பட்ட விடயநிகழ்விலிருந்து மட்டுமே கற்றுக்கொள்கின்றனர். இன்றுவரை நிறுவனங்களின் கூட்டுக் கற்கை குறைந்த அளவிலேயே வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதியதும் முக்கியமானதுமான சொற்றொடர் அறிவு முகாமைத்துவம் ஆகும். இரண்டுக்கும் ஒத்த முறையியல் இருந்த போதிலும் கூட, கற்றலை முகாமைத்துவம் செய்வதற்கும், அறிவு முகாமைத்துவம் என்னும் விரிவான எண்ணக்கருவுக்குமிடையே வேறுபாடு உள்ளது. இடையீட்டின் அனைத்து மட்டங்களிலும் கற்றல் முறைவழி ஒன்றை உருவாக்குவது முக்கியமானதாகும். மதிப்பீடு உதவிச் சமுதாயத்தினுள் கற்றலுக்கான பொதுவான ஒரு கருவியாக நீண்டகாலமாக இருந்துவந்தபோதும், பேரியல்பு முழுமையான ஒரு பகுதியாக இருந்ததில்லை. மாறாக, இடையீடுகள் பேரியல்பு மட்டத்தில் ஆராய்ச்சியாளர்களால் வழமையாக முறைவழிகளுடன் நேரடித்தொடர்பு இல்லாத பிற்செயலாலேயே அடிக்கடி ஆராயப்படுகின்றன. கற்றலானது நிகழ்ச்சித் திட்டங்களினதும், செய்திட்டங்களினதும் ஒரு பகுதியாகும் என்ற நிகழ்வுண்மைக்குப் புறம்பாக அவை தொடரும் முறைவழியுடன் இணைக்கப்பட்டிராமையால் வழமையாகப் பாடங்கள் கற்கப்படுவதில்லை.

ஆகவே, அனைத்து மட்டங்களிலும் நிரந்தரமான சுயமதிப்பீடுகளை நடாத்தி இடையீடுகளை ஆராய்ச்சியுடனும், நிபுணத்துவ இயலுமையுடனும் இணைப்பது (சிமிதலி, ஹெல்மிச் 1999ஐப் பார்க்கவும்) அல்லது ஆகக்குறைந்த ஏதோவொரு வகையான கட்டமைக்கப்பட்ட பிரதிபலிப்புகளையும், கலந்துரையாடல் முறைவழியையும் வடிவமைப்பது உசிதமானது. மற்றுமொரு விருப்புத்தெரிவானது ஆவணப்படுத்தலையும், கற்றலையும் கையாளக்கூடிய பங்காளர்களுடன் உத்திமுறைசார் ஒப்பந்தத்தில் ஈடுபடுவதாகும். கற்றல் எப்படி நிறைவேற்றப்பட்டது என்பது முக்கியமல்ல. விளைவுகள் எழுத்து மூலமாக இற்றைப்படுத்தப்பட்டு கற்றல் வெறுமனே சுவடிக்கூடத்துக்கானதல்ல, ஆனால் இடையீட்டு முறைவழியின் ஒரு பகுதியே என சம்பந்தப்பட்ட அனைவரும் பரஸ்பரம் புரிந்துகொள்ளவேண்டியதே முக்கியமானதாகும். (பவென்ஹோல்ஸ் 2000 டி ஐப் பார்க்கவும்).

## 3. திறந்த வினாக்களும், எதிர்காலச் சவால்களும்

கடந்த பத்து ஆண்டுகளில் சமாதான உருவாக்கல் மோதுகை மாற்றுநிலையாக்கத் துறையினுள் உள்ள கல்விசார் சமுதாயத்தினரும், செயற்பாட்டாளர் சமுதாயத்தினரும் தமது துறையில் மேலும் பயனுறுதியுடன் பணியாற்றுவதற்கான வரைவெல்லைகளையும், நிபந்தனைகளையும்பற்றி நன்கு கற்றறிந்துள்ளனர் (இத்தொகுதியில் கெவின் கிளெமென்ற்ஸ் என்பவரின் பங்களிப்பைப் பார்க்கவும்). எனது அவதானிப்பின் பிரகாரம் செயற்பாட்டாளர்கள் தமது நாளாந்தப் பணிகளில் இவ்வறிவினைப் பயன்படுத்துவதற்குத் தடையாக விளங்கும் பல திறந்த பிரச்சினைகள் உள்ளன.

முதலாவதாக, ஏனைய நிலைமைகளிலிருந்து பாடங்களைக் கற்பதுதொடர்பில் இன்னும் குறிப்பிடத்தக்க தகவல் இடைவெளி உள்ளது. ஆராய்ச்சியாளர் சமுதாயம் பல வேறுபட்ட சமாதான முறைவழிகளை ஆராய்ந்து அதனூடாகப் பெரும் அனுபவத்தைப் பெற்றுள்ளது. உண்மையில் ஆராயப்படாத ஆயுதமேந்திய மோதுகைகள் எதுவுமில்லை. சமாதான உருவாக்கல், மோதுகை நிலைமாற்றம் தொடர்பில் பலவிதமான எண்ணக்கரு ரீதியான அணுகுமுறைகளைப்பற்றிய பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இந்த அறிவு அனைத்தையும் ஒன்றாகக் கொண்டுவரக்கூடிய முறையான விரிவான ஆராய்ச்சி இன்னும் இல்லாமையே குறைபாடாகும். அத்தகைய பெரிய, விரிவான, கல்விசார் முயற்சிகளுக்கு கொடையாளர்கள் நிதியளிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

சமாதான ஆராய்ச்சியாளர்கள் அடிக்கடி சமாதான உருவாக்கலில் ஆக்கபூர்வமான உதாரணங்கள் தொடர்பாகக் கூடுதலான தகவல்களின் தேவையை வெளிப்படுத்தியுள்ளனர். வெவ்வேறு சிக்கலான பிரதேசங்களில் பணியாற்றும்போது உள்ளூர் நிறுவனங்களிடையே எத்தனை ஆர்வமிக்க நல்ல உதாரணங்களை எம்மால் காணமுடியுமென்பது வியப்பூட்டுவதாக உள்ளது. துரதிருஷ்டவசமாக இந்த அறிவு ஆவணப்படுத்தப்பட்டிராமையால் செயற்பாட்டாளர்கள் இந்த அனுபவங்களிலிருந்து கற்றுக்கொள்வது இயலாதவொன்றாக உள்ளது. இது ஆராய்ச்சிக்கு மட்டுமன்றி சர்வதேசக் கொடையாளர்களும், முகவர்நிலையங்களும் அத்தகைய முன்முயற்சிகளுக்கு நிதியளிப்பதற்கும் ஒரு சவாலாக உள்ளது. அத்தகைய அனைத்து வேலைத்திட்டங்களிலும் கற்றலை முறையாக இணைப்பதற்கான புதிய வழிகளைப்பற்றிச் சிந்திப்பதற்குரிய காலம் வந்துவிட்டது.

இப்பாடங்களின் தேடல் முடிவுகளைப் போதுமான அளவில் செயற்படுத்துவதற்கு பல செயற்பாட்டாளர்கள் தவறிவிட்டதற்கான மற்றுமொரு காரணம் உயர்ந்த அளவிலான அவர்களது ஆர்வமாகும். துரதிருஷ்டவசமாக இந்த ஆர்வங்கள் சமாதான உருவாக்கல் இலக்குடன் ஒத்திசைவு கொண்டவையாக இல்லை. உதாரணமாக, அரசசார்பற்ற அமைப்புக்கள் சிலவேளைகளில் தாம் சரியான செயற்பாட்டாளர் அல்ல என்பதை உணர்கின்றனர். எனினும், ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவுசெய்யவேண்டும் என்ற காரணத்தினால் தொடர்ந்தும் இருக்கின்றனர். அவ்வாறாகவே, தடம் 1 செயற்பாட்டாளர்களும் சிலவேளைகளில் நோபல் பரிசை வெல்லும் ஆசையால் உந்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய செயற்பாட்டாளர்கள் சமாதான உருவாக்கல், மோதுகை மாற்றுநிலையாக்கம் ஆகியவற்றுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு நல்குவது என்ற ஆரம்ப இலக்குப் பாதையை தவறவிட்டவர்களாவர்.



மேற்கூறப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் ஆக்கபூர்வமான முறையில் கையாள முடியுமென்றபோதிலும், வன்செயல் மோதுகைகளை மேலும் வெற்றிகரமாகவும், விரைவாகவும் சமாதானப் பின்னணியாக மாற்றலாம் என்பதற்கு இன்னமும் எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. நாம் எப்போதும் மோதுகைகளின் சிக்கலான தன்மையை மட்டுமல்லாது, நாம் அனைவரும், குறிப்பாக வெளிவாரிச் செயற்பாட்டாளர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ள தனிப்பட்ட மட்டுப்படுத்தல்கள் பற்றியும் மனதில் கொள்ளுதல் வேண்டும். எமது நடைமுறைகளை மேம்படுத்துவதில் நாம் ஊக்கமுடன் பணியாற்றக்கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. இன்னும் சரியாகச் சொல்வதானால், மோதுகைப்பிரதேசத்தில் உள்ள உள்ளகச் செயற்பாட்டாளர்களே மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் பயனுறுதிமிக்க விதிகளை ஈற்றில் தீர்மானிப்பவர்களாவர் என்பதை நாம் மறந்துவிடலாகாது. நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தை உருவாக்கக்கூடிய செயற்பாட்டாளர்கள் அவர்கள் மாத்திரமேயாவர்.

## 4. உசாத்துணையும், மேலதிக வாசிப்பும்


Bercovitch, J. 1992. *Mediation in International Relations*, London: MacMillan.

CAII 2000. *Conflict Prevention, A Guide,* online: http://www.caii-dc.com (accessed 9.10.2000).

Commission of the European Community 1993. *Manual: Project Cycle Management, An Integrated Approach and Logical Framework,* Brussels: European Community.

Erasmus, V. 2000. "Community Mobilisation as a Tool for Peacebuilding," *in* Paffenholz and Reychler, op. cit., 246–257.

Fisher, R. and L. Keashly 1991. "The Potential Complementarity of Mediation and Consultation within a Contingency Model of Third-Party Intervention," *Journal of Peace Research,* Vol. 28, No. 1, 29- 42.

Fitzduff, M. 2000. "First and Second Track Diplomacy in Northern Ireland," *in* Paffenholz and Reychler, op. cit., 110–120.

Information, Training and Development (ITAD) Ltd 1999. *Project Cycle Management Training Handbook*, Sussex: ITAD.

Kelman, H. 2000. "Intractable Conflict Resolution in the Middle East," *in* Paffenholz and Reychler, op. cit., 97-109.

Kleiboer, M. 1994. "Ripeness of Conflict: A Fruitful Notion?" *Journal of Peace Research*, Vol. 31, No.1, 109-116.

Kramer, G. 2001. "Zur Vermittlung und Entsendung ziviler Fachkräfte," *in* Zivile Konfliktbearbeitung. Eine internationale Herausforderung (Band 8 der Schriftenreihe des Österreichischen Studienzentrums für Frieden und Konfliktlösung), Münster: agenda Verlag.

Kruhonja, K. 2000. "Motivation and Qualifications," *in* Paffenholz and Reychler, op. cit., 21–28.

Krummenacher, H. and S. Schmeidl 1999. "FAST: An Integrated and Interactive Early Warning," *The Soviet and Post-Soviet Review*, Vol. 24, No.3, 147–159.

Lederach, J. P. 1997. *Building Peace: Sustainable Reconciliation in Divided Societies*, Washington, DC: United States Institute of Peace.

Lund, M. S. 1996. *Preventing Violent Conflict*, Washington, DC: United States Institute of Peace.

Lund, M. S. and A. Mehler 1999. *Peace-Building and Conflict Prevention in Development Countries. A Practical Guide*, Ebenhausen: CPN.

Mehler, A. and C. Ribeaux 1999. *Krisenprävention und Konfliktbearbeitung in der Technischen Zusammenarbeit* (Schriftenreihe der GTZ No. 269), Wiesbaden: Universum Verlagsanstalt.

Miall, H., O. Ramsbotham and T. Woodhouse 1999. *Contemporary Conflict Resolution: The Prevention, Management and Transformation of Deadly Conflicts*, Cambridge: Polity Press.

Mott Foundation 1999. *Reaching for Peace: Lessons Learned from the Mott Foundation*, Flint, MI: Charles Steward Mott Foundation.

OSCE, 2000. *Field of Expertise: General Minimum Requirements (Semi-final version)*, Vienna: OSCE Secretariat.

Paffenholz, T. 1998. *Konflikttransformation durch Vermittlung*, Mainz: M. Grünewald.

Paffenholz, T. 2000a. "Thirteen Characteristics of Successful Mediation in Mozambique," *in* Paffenholz and Reychler, op. cit., 121–127.

Paffenholz, T. 2000b. "Conclusions: Peacebuilding: A Comprehensive Learning Process," *in* Paffenholz and Reychler, op. cit., 535–545.

Paffenholz, T. 2001 (forthcoming). "Community-based Bottom-up Peacebuilding," *Horn of Africa Series*, Uppsala: Life and Peace Institute.

Paffenholz, T. and L. Reychler 2000. *Peacebuilding: A Field Guide*, Boulder, Co: Lynne Rienner Publishers.

Responding to Conflict 1999. *Working with Conflicts. Skills and Strategies for Action*, London: Zed Books.

Reychler, L. 2000. "Conceptual Framework," *in* Paffenholz and Reychler, op. cit., 3–16.

Smillie, I. and H. Helmich 1999. S*takeholders. Government-NGO Partnerships for International Development*, London: Earthscan.

Spelten, A. 1999. *Instrumente zur Erfassung von Konflikt- und Krisenpotentialen in Partnerländern der Entwicklungspolitik* (Forschungsberichte des BMZ, No. 126), Bonn: Weltforum Verlag.

Stedman, S. J. 1991. *Peacemaking in Civil War: International Mediation in Zimbabwe, 1974–1980*, Boulder, Co: Lynne Rienner Publishers.

Svensson, J. 2000. "Designing Training Programmes," *in* Paffenholz and Reychler, op. cit., 291–300.

Truger, A. 2000. "Training Peacebuilders and Peacekeepers,"*in* Paffenholz and Reychler, op. cit., 35-42.

Wehr, P. 1978. "Citizen Values and Forest Policymaking," *Western Sociological Review*, Vol. 9, No. 1, 39- 48.

Wehr, P. 1979. *Conflict Regulation*, Boulder, Co: Westview Press.

Wouters, J. 2000. "Training Humanitarian Aid Workers," *in* Paffenholz and Reychler, op. cit., 43–49.

Zartman, W. I. 1989. *Ripe for Resolution, Conflict and Intervenbtion in Africa,* New York, NY: Oxford University Press.